ஓம் விநாயக நம:




# சந்திர தீபம்


## சைவநீதி வளர்த்திடும் தமிழ்ப் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.



UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1981-11-30
PERIODICALS DIVISION
LIBRARY








வெள்ளிக்கிழமை [13-6-81]

துர்மதி வரு. வைகாசி மாதம் 30-ம் நாள்

இதழ்: 4 சுடர்: 14

பேர் அருள் திருநூல் மலர்

# அறிவின் எல்லையில் இருப்பவர் கடவுள் அவர் என்றும் நம்மை விட்டுப் பிரிவதில்லை

## இதுவே நமது சைவப் பெரியோரின் துணிபாகும். இத்துணிபுடையோர் வேண்டியதை வேண்டியவாறு பெற்றுக்கொண்டார்

### எல்லா உலகையும் ஆக்கிட திருக்கூத்தாடும் இறைவன் எம்மையும் உடையான். இது உண்மை என்றதே எம் சைவ நாயன்மார் அனைவரது உண்மையுமாகும்

இந்த உண்மைப் பாட்டைத் தெளிந்த சண்டேஸ்வரநாயனர் பசுவை அதனை மேய்க்கும் இடையன் அடித்திடக் கண்டு அவனுடன் வாதிட்டு தானே பசு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டவர்;

அப்படியாக இந்த உண்மையைத் தெளிந்த ஒருவனல்தான் உயிர்களிடத்து அன்பு பிறக்கும். உயிர்க்கொலை செய்ய எத்தனியான். தன்உயிர்போக வரினும்தான் பிறபொருளின் உயிர் போக்க நினையான்: இதுதான் சைவ சிலத்தில் அகிம்சை என்னும் தலையான சீலத்தில் நிற்பதாகும்.

தான் ஓடும் கார் பல உயிரை அடித்துக் கொல்ல தான் அதில் ஏறி இருந்து சந்தோஷமாக ஓட நினையான். இதைத்தான் சைவப் பெரியோர் அனைவரும் வலிஉறுத்தியுள்ளனர்: எல்லா உயிரையும் சிவனது இருப்பிடமாகக் கருது என்றுர்கள்;

இதுவே சைவம்: நீறு என்பது பொதுவாயது. எல்லாத் தீங்கு நினைக்கும் எண்ணங்களையும் போக்கவல்லது. இது சிவனுல் அணியப்படுவது. சுடலையில் நீறுபூசி என்பது எல்லா உயிரும் தனதே என்ற உண்மையின் தலைகாட்டும் செயலாகும்.

நீற்றை அணிந்து எலும்புமாலை சூடியதின் அர்த்தம் உயிர்மீது கருணையின் பெருயாகும்;

இந்த உண்மை தெளிந்தவர் எம்பிரான் சுந்தரர்; அவர் பாடிய திருப்பதிகம் ஒன்று கீழே தருகிறோம்; இவ்வுலகில் தனக்கு என்ன வேண்டுமோ அதை எல்லாம் எம்பிரான் சுந்தரர் பெறுகின்றுர். அவருடைய உண்மை நிலையைப் பாருங்கள். உலகத்து உயிர்கட்கெல்லாம் ஓங்காரத்து ஒளியாகி நின்றுனே என்கின்றுர். இந்த வகையாக எல்லா உயிரிடத்தும் ஓங்காரத்து உருவாய் அதன் ஒளியாய் நிற்பவன் கடவுள் என்கின்றுர்;

இதன் தாற்பரியத்தை விளங்கினுல் உயிர்க்கு உயிராய் நிற்பவர் கடவுள் ஒருவரே என்பது தெளியப்படும். இதை இலேசாக வாயால் சொல்லி விட்டோம். ஆனுல் அநுபூதி நிலையில் இதைப் பெறலாம் என்றுல் இந்த தான் சங்கடம் ஏற்படுகின்றது.

மாணிக்கவாசகர் இதன் தத்துவத்தை "கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை, என்கின்றுர்; ஆனுல் கண்டறிய முடியாத கடவுளைக் கண்டு கொண்டு அவரிடம் பல பொருள்களும் வேண்டிப் பெறுகின்ற சுந்தரர் பெருமான் திருவருள் நிலையாதாகும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

சர்வ உலகமும் அதிசயிக்கும்படியாக எம்பிரானிடம் தமக்கு வேண்டிய ஆடை உணவு அலங்காரப் பொருள் அத்தனையும் வேண்டிப்பெறுகின்றுர்.

இப்படியாக எங்கடவுளிடத்து வேண்டியதை வேண்டியவாறு பெற்று உய்ந்தவரலாறுகள் பல உண்டு.

ஒரு அன்பர் நம்மிடம் கேட்டார் அன்று நடந்ததாயின் இன்று ஏன் அவை நடக்கக்கூடாது என்றதாக நான் சொன்னேன் அன்றுள்ள கடவுள் இன்று இல்லாமல் போகவில்லை. இருக்கவே செய்கிறுர்; ஆனுல் நாம் நாம் செய்யவும் பாவங்கள் தினம் தோறும் பெருகிப் பெருகி வருதயாலே எம்பாவங்களை நீக்கிட வகையறியாது, எல்லாம் இயந்திரமயமாக்கி விட்டோம்.

அன்று மனித வாழ்வில் இயந்திரங்கள் மிகக் குறைவு; அப்படியானுல் வேண்டிய வசைகட்கு இறைவனிடமே விண்ணப்பிக்கும் நிலை ஏற்படும்.

இன்று வேண்டியதை எல்லாம் விஞ்ஞானம் பெற்றுக் கொடுக்கின்றது. ஆனுல் அன்று மக்கள் வேண்டியதை எல்லாம் திருவருள் நிலமூலம் பெற்றனர். அடுத்ததாக இறைவனிடம் பாசங்கள் முழுவதையுமே அகற்றிவிட்டு நின்றே விண்ணப்பித்து பெற்றுக்கொண்டனர்.

சுந்தரர் பெருமான் சென்று பாடி விண்ணப்பிக்கும்போது சிலமே தமது தலையான செயலாகக் கொண்டு நின்றுபாடி உள்ளார்.

இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்ற பின் உலகின் வாழ்க்கையில் தமக்காக எழுகின்ற எந்த இச்சையுமே தாம் விரும்பாது இறைவனைப் பாடுதலே தமது தொழிலாகக் கொண்டார்.

மற்றுப்பற்று எனக்கின்றி நின்திருப் பாதமே மனம் பதித்தேன் என்று தம்மை இறைவனிடமே பூரண சரண்புகுகின்றுர். அந்த சரண்புகுதலாலே பல பல நன்மைகளையும் பெற்றுக் கொள்கின்றுர்.

பெறுதற்கரிய பிறவியில் தமக்கு இறைவன் அருள் கிடைத்தமை பற்றி நன்கு உள்ளம் மலர்வாகி நான் பெற்றபேறு வேறு யார் பெற்றுர் என இறுமாப்புக் கொள்கின்றுர்.

இந்த இறுமாப்புடன் வாழ்ந்த அவர்தான் சிவதொண்டின் பெருமையை உலகறியச் செய்து கொள்கின்றுர்.

இவ்வுலக வாழ்வு அவ்வுலக வாழ்வு என்ற இருமையும் கடந்து ஏகமாய சிவனருளே உய்யும் மார்க்கமாகப் பற்றிக் கொண்டு நின்று பேறெய்திய சுந்தரர் பெருமானது திருவடிகளே சைவ மக்களுக்கு இறைவன் திருவருள் பெறற்கு ஒரு பற்றுக்கோடாகின்றது: பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் தம்மை உய்யக்கொள்ளும் மூர்த்தியாக சுந்தரர் பெருமானைப் பற்றிக் கொள்கின்றுர்.

பெரிய புராணத்து அடியார்களை சேக்கிழார் பெருமான் பாடிடும் பொழுது சுந்தரர் பெருமான் இங்கு வருதற்கு ஏதுவாக இருந்தவரலாற்றை முதலாகக் கொண்டு அதனை ஒரு சருக்கமாகவும் அதன் பின்னுல் சுந்தரர் பெருமான் பாடியருளிய திருத்தொண்டத்தொகைப் பதிகங்கள் பதினென்றையும் பதினெரு சருக்கமாகவும் பாடி பன்னிரண்டு சருக்கங்கள் கொண்டதே பெரிய புராணமாகக் கொள்கின்றுர்;

இந்தப் பன்னிரண்டு சருக்கங்களில் முதல் திருமலைச் சருக்கமும் முடிவான மன்னிய சீர்நின்ற சருக்கம் ஆதியமுடிவிலும் நீங்கி ஏனையபத்துச் சருக்கங்களிலும் ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள துதிபாடி இருக்கின்றுர்.

அப்பாடலிலே ஏன்தான் சுந்தரர் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்டார் என்பது தெரியப்படுத்தப்படுகின்றது. அப்பாடலை பெரிய புராணத்து காணலாகும். அதன் பாடல்களை சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி என்ற பகுதியில் காணுங்கள்;

இப்பொழுது நாம் அப்பாடல்களின் கருத்தைக் கீழே தருகின்றேம்; எம்பிரான் சுந்தரர் திருவடிகளைத் துதித்தலில் சேக்கிழார் எவ்வகையான பத்திமை செலுத்துகின்றுர் எனபதைப் பாருங்கள். சுந்தரர் வருகை இந்த உலகம் உய்ய வந்தருளப்பெற்றது: அவர் வருகை நாம் செய்த புண்ணியம் என்று இப்படி பலவாறு துதிக்கின்றுர்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ நிலையில் எல்லாத் திசைகள் செய்த தவத்திலும் தென்திசை செய்த தவம்தான் மேலாகி உள்ளது என்பது தெளிவுபடுத்துகின்றார். மண் ஆசை பெண் ஆசை பொன் ஆசை புகழ் ஆசை எதையும் விரும்பாது சாம்பலைப் பூசி தரையில் படுத்து சிவன் திருவடிகளை மறவாத தியானத்தில் இருக்கும் உத்தமர்களின் தவநெறி உய்திபெற அவர் வருகை திருவருள் கடாட்சமாயது என்பன போன்ற கருத்துக்கள் தெளிவுபடுகின்றன; ஒவ்வொரு சருக்கத்தின் கீழும்வரும் பாடலின் உரையைமட்டும் வரன்முறை கீழே தருகின்றோம்.

தில்லைவாழ் அந்தணர் சருக்கம் ஆரம்பமாக அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார் சருக்கம் ஈறாக உள்ள பத்துப் பாடலின் உரைகாண்கிறீர்கள்.

1. தாமரை மலர் மேல் பிரமனும் திருமாலும் இன்னமும் தேடியும் காணுதற்கு அரிய பெருமான் அருள்வள்ளல் சிவன்; பலரும் புகழும் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து தனது அடிமை உறுதியின் பழமை காட்டி உலகம் உய்யும்படி ஆண்டு சொண்டிடப் பெற்றவராகும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடி நினைந்து அவர் திருவடிகளை உச்சி மீது கொண்டு வாழ்வது எமது வாழ்க்கையின் தலையாய கருமாகும்.

2. தீமை விளைவிக்கும் செயல்களால் எழுந்த மனஅழுக்கால்வரும் பிறவிகட்கு வரமாட்டோம். ஏன்எனில் செஞ்சடையுடன் மிளிர நின்று ஆடியருளி நிற்கின்ற கூத்தனை சிவனை எம் அப்பனை அன்று ஒரு நாள் அவரின் திருக்காதில் அணிந்த தோடுகள் வீசும் ஒளியின் நிலவு இருளாய கொடுமையை அகற்ற; சுந்தரர் பெருமான் தனது ஒரு பெண்ணுய பரவை தன் மீது கொண்ட கோபத்தினை நீக்கும்படி பரவை அம்மையார் மாளிகைக்கு இருதரம் தூது செல்லும்படி வேண்டி அத்தன்மையினுல் பரவையின் கோபம் தணிப்பித்து தம்முடன் மீண்டும் உறவாக்கப் பண்ணுவித்த சுந்தரர் பெருமான் தமக்கு ஆளாக எம்மைக் கொண்டமையாலே! சுந்தரர் பெருமான் சிவனைத் தூதாக கொண்டவர். ஆனமையால் அவர் திருவடிகளை இறுகப் பற்றிய நாம் அவர்க்கு ஆளாகினேம். அவர் எம்மை ஏற்றுக்கொண்டமையால் தீமைபயக்கும் எச்செயலும் அதன் மூலமாக பிறவி எடுத்து உழலுதலும் ஆகிய செயல்கட்கு நாம் இனி வரோம்.

3. தமது நேசம் நிறைந்த திரு உள்ளத்தால் நீலநிறம் நிறைந்த அழகிய திருக்கண்டத்துடன் விளங்கும் ஈசன் சிவன் அடியார் பெருமையினை எல்லா உயிர்களும் தொழும்படி, ''தில்லைவாழ் அந்தணர்'' எனத் தொடங்கி எடுத்து இத்தேசம் எல்லாம் உய்யும்படி திருத்தொண்டத் தொகை என்னும் பாடலை முன் பாடியருளிய திருவாளன் என் அப்பன் சுந்தரனது வாசம் நிறைந்த மலர் போலும் திருவடிகளை உணர்ந்து வணங்கிடுப்படியாக ஓர் பேறு கொண்டு வந்த இந்த எமது பிறவியினை நாம் வணங்கிடுவோம்.

பிரதம மந்திரியாய் இருந்தும் அது வேண்டாம் என நீக்கி சுந்தரர் பெருமான் திருவடிகளை தொழுது அவர் திருத்தொண்டத்தொகைப் பதிகத்தை முற்கொண்டு பெரிய புராணம் பாடும்போது; பிரதம மந்திரிப் பதவியிலும் சுந்தரர் திருவடி தொழுதிட வந்த பிறவியை என்ஞகக் கருதுகின்றார் சேக்கிழார் பாருங்கள், தன் பிறவியே வணங்குவேன் என்றபோது சுந்தரர் பெருமானின் திருவருட்பேறு எவ்வகையாகக் கருதப்படுகின்றது.

4. இந்த நாட்டில் உள்ளார் யாவரும் அறிந்திட முன்னொரு காலத்தில் முதலை உண்டு இறந்த ஐம்படை ஆபரணம் பூட்டிய அழகுடைய மார்புடன் விளங்கும் சிறிய அந்தணர் சிறுவனை திருப்புக்கொளியூர் நகருள்ள தாமரைக்குளத்துள் உண்டுகொண்ட பெருகுதலைவாய் நின்றும் அன்று தாம் அவ்விடம் சென்று நல்ல நாளில் உயிர்பெற்றெழச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடிகளை நினைவார்களை எம் அப்பன் திருவடிகள் அத்தகைய திருவடி துதிப்பார்களை அவர் தம்மால் நீக்க முடியாத தொலையா வழி என்னும் துன்பவழி நின்று மீட்பன என்ற அசையாத உறுதி கொண்டோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளைத் துதிப்பாரை அவர் இறந்தபின் நேரும் தொலையா வழியின் துயர் நீக்கும் என உறுதி கொண்டோம்.

அவரது திருவடிகள் மரணம் என்னும் துன்பத்தில் நின்றும் மீட்பன என்றவாறு.

5. வயல் பண்ணைகளும் குளங்களும் புடைசூழ இனிதுடன் விளங்கும் திருவொற்றியூரில் தன் பாகத்து வைத்த துணைவியான பார்வதி அம்மையும் தாமும் பிரியாதிருக்கின்ற சோதியாகிய சிவபெருமானை தனக்கு ஒரு தோழனுக அமைய அவரிடம் துணையாகச் சிறந்து பருத்த தனமுடைய காதலி சங்கிலி அம்மையாரைத் தமது பெரும்தோள் அணைந்து சேரவருவிக்கும்படி திருமணம் செய்து வைத்திடச் சென்றணைந்த ஒருவராய சுந்தரது திருப்பாதமே நமக்குக் காப்பாக நாம் அணைந்து கொண்டோம்.

தோழராய தம்பெருமானை தம்மைச் சங்கிலியும்மை திருமணம் செய்திட வேண்டி சென்றணைந்த சுந்தரர் திருவடிகள் நமக்கு காவலாகும் என்கின்றார்.

6. தேனின் இனிமையும் குழல் ஓசையின் இனிமையுமே பிழைத்திடும்படி இனிய மொழி பேசும் பரவை அம்மையார் தம்பால் கொண்ட கோபம் தீர்க்க இளம் பிறையும் பாம்பும் பகை உடையன தம்பகை நீங்கி ஒழுங்காகப் பகைதீர்ந்திட தம்சடை மேல் வைத்த பெருமானுர் தூது சென்று பரவை அம்மை புலவி நீங்கச் செய்த நாளில் ஈசன்தான பரவை அம்மையின் மனைநோக்கிப் புறப்படும் பொழுது தம்முடன் அங்கிருந்த பரிசனரில் ஒருவன் குருடனுகவும் கூனனுகவும் வரமுடியாது வருந்திய நேரம் அக்கூனனுடைய கூனினையும் குருடனுடைய குருட்டினையும் அருளால் நீக்கி தமக்கு ஏவல் கொள்வராய சுந்தரமூர்த்தி சுவாமிகளது திவ்வியம் விளங்கும் மலரடிகளை யானும் போற்றித்தீர்ந்து கொள்கின்றேன் எனக்கு வரவிருக்கின்ற ஏழு பிறப்பின் என்னை முடங்கச் செய்கின்ற அல்லலாம் பெருங்கூனிலை.

7. எம் உள்ளத்துள் என்றும் ஏதொன்றுக்கும் இனி அசைவு அல்லது பயம் இலலோம் நாம். எவ்வாறெனில் உலகம் உய்ந்திட அன்று ஏற்று உண்டருளிய இருண்ட கண்டத்தை உடையராய் திருமுதுகுன்றம் என்னும் தலத்து அமர்ந்த பெருமான் சிவன் தருகின்ற பன்னிரண்டாயிரம் பொன்னையும் திருமுதுகுன்றத்து அடியில் ஓடுகின்ற முத்தாற்றில் போட்டு பின்பு வந்து வளத்தால் பெருகி ஏழு உலகமும் வணங்கும் பெரும் திருவாரூர் குளத்தில் அப்பொன்னை எடுத்த எம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருவடிகளையே தஞ்சமான அடியேனையும் கொடிய வினையின் படுகுழியில் நின்றும் எடுத்து ஆண்டு கொண்டார்.

தம்மையே முற்றிலும் சரணமான என்னையும் அணைத்து உய்ய எடுத்துக் கொண்டார் என்னும் பற்றுலே என் உள்ளத்தில் வினையின் கொடுமைகளுக்கு நாம் அஞ்சிடவேண்டியதில்லை.

8. எமக்கு இதில் ஓர் சிறப்பின் செறிவு உண்டு என்று இத்திருத்தொண்டில் எம் சிந்தை செல்வதால் வரும்பயனுக்கும் ஓர் குறி உண்டு. அக்குறிப்பால் நாம் யாதும் ஓர் குறையும் இல்லோம். எவ்வாறு இதுவாகும் என்றுல் நிறைந்த கருணையுடன் வெறித்திடும் தேன்சொட்டும் சோலை உடைய திருமுருகன்பூண்டி என்னும் தலத்தின் வழியாக வரும் பொழுது வேடர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பொருளைப் பறித்தெடுத்திட அதனுல் பொருள்பறி உண்ட அவர் எம்மை மீளமீளத் துயரத்து ஆளாக்கும் பழைய வினையின் வேரெல்லாம் பறித்து எடுப்பார் என்னும் நினைவாலே;

ஈசனுடைய கருணையால் பொருள் பறிஉண்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆதலினுலே அக்கருணைக்கு இலக்காகிய சுந்தரர் அடியேன் அவர் திருவடிகளைப் பரவும் தொழிலாகக் கொண்ட என்வினையின் வேரையும் அழித்து நாம் உய்ந்திட வைப்பார் என்னும் நம்பிக்கை என்றும் உண்டு. அவர் திருவடியை பாடுதலால் அவர் திருவடிகள் எம்மை மேல் தூக்கி விடும் என்பதால் இத்திருத்தொண்டில் ஓர் செறிவு உண்டு.

9. பெறுதற்கரிய தவம் யாம் முன்பு செய்ததென்னவாமோ! யாவதும் ஓர் பொருள் அல்லாத என் மனத்தும்; அல்லாமல் நாவன்மை உடைய பாடும் புலவர்கட்கெல்லாம் காவலராகிய எம்பெருமான் சுந்தரது அன்று பெருகிய ஆறு கிழிய வழி நடந்த சிவந்த தாமரை மலர்கள் போலும் திருவடிகள் எம் உச்சிமீதும் மலர்ந்து கொண்டது;

சுந்தரர் பெருமானது திருப்பாதமே பொருளென உணர்ந்து இப்பிறப்பில் என் சென்னியிலும் மனத்திலும் கொண்டு தொழுதிட அடியேன் முற்பிறவியில் செய்த தவம் யாதோ என்கிறுர் சேக்கிழார்;

10. பகைவரது முப்புரம் எரி செய்த வில் உடைய சிவபெருமான் எழுந்தருளியிருந்த திருமுருகன் பூண்டித்தலத்தில் செல்கின்ற நேரத்தில் சுற்றி நின்று ஆர்த்து வில்வேடர் பறித்தெடுத்துக் கொண்ட பெரும் தொகையான நிதியின் பொதிகள் யாவையும் சுமந்து கொண்டு முற்றுத முலை உடைய உமையம்மையார் பாகத்தமர்ந்த எம்பெருமான் சிவனது பூதப்படைகளின் முதன்மை உடைய கணங்களை தம்முடன் சென்றிடும் படியான மூடிவிலாத அருளின் பேறு பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிகளைப் பாடலால் போற்றிட அடியேன் முன்னைப்பிறவியில் செய்த தவம் பெரிதாமே!

இதனை உணர்ந்து கொண்டால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வுலகில் செய்த அற்புத மகிமை எவ்வாறென்றும்; சிவன் அடிமைத் திறத்தை உணர்த்திடக் கொண்ட வரலாறும் காணலாகும்.

ஆகவே தமிழ் மக்களாகிய எமக்குச் சிவன் ஒருவனே தெய்வம் என்றும் அவன் திருவடி மறவாது சீலமுடன் போறறி வருவார்க்கு வேண்டியதெல்லாம் பெறலாகும் என்பதும் தெளிவுபடுகின்றது.

சிவன் திருவடி வணங்கி அருள் பெறத் துணிபவர்க்கு அருள்தான் கைகூட்ட வேண்டும். அவன் அருளே கண்ணுகக் காணின் அல்லால் வேறு வகையால் அறிய முடியாது; இதை எல்லாப் பெரியோரும் இனிதே வலி உறுத்தி உள்ளனர்.

யோக சுவாமிகள் இதனை அவன் அருளாலே அவன்தாள் வணங்கி ஆராதனை செய்து சீராய் வாழ்வோமே எனக் கூறுகின்றார்.

கிடைத்தற்கரிய பிறவியிலே சிவனருள் பெறுதல் மிகவும் மேலான பேறு; அப்பேறு ஒன்று கிடைத்து விட்டால் பின்னர் பெறும் பேறு இல்லை; எல்லா நலன்களிலும் சிவனருள் எய்தல் ஈறிலாத இன்ப விளைவை ஏற்படுத்திவிடும். தொல்லை வல்வினையாவும் நீங்கப்பெற்று அதன் ஆநுபவிப் புகளும் அகன்றிடும்.

இனி இப்பாடலை எடுத்துக்கொண்டால் எம்பெருமானை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாகைக்காரோணம் என்னும் தலத்துள் சென்று பாடி நல்ல இரத்தினுபரணங்கள் ஆடைகள் வாசனைத் திரவியங்கள் யாவும் பெற்ற வரலாறு பெரிய புராணத்துக் கூறப்படுகின்றது. அதனை நாம் இங்கு தந்துள்ளோம். அப்பாடலை ஓதி நன்குடன் வாழ்வீராக.

அடியேன் எம்பெருமக்களது அரிய சிறப்பையும் அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாடு பொன் கொழிக்கும் பூமியாகவும் பெரு வெற்றி புகழ்படைத்த பூமியாகவும் விளங்கியது. ஆகையாலே வருங்கால சந்ததிகள் எம்பெருமக்கள் செய்த தொண்டின் நலனையும் அதனுல் தமிழ் நாடு பெற்ற சிறப்புக்களையும் ஞாபகப்படுத்தும் வகையில் இப்பதிகத்தை இங்கு தருகின்றேன்; திருவருள் நெறியாவதோ நாம் அறியோம்.

பல அல்லல்களுக்கிடையில் இப்படியான பணியைச் செய்தல் எவ்வளவு சிரமமாவது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளுங்கள். என் பணி முழுவதையும் திருவருள் வசத்திடம் ஒப்புவிக்கின்றேன்.

எமது மக்கள் இத்தகைய பதிகங்களை ஓதி நன்கு வாழ்வு பெறுவார் என்னும் நம்பிக்கையால் இதனைத் தருகிறேன்.

இன்றைய கலியுகத்தில் மக்கள் இதனை ஓதிக்கொள்ளல் மிகச்சிரமமுடையதாய் இருக்கும் என்பது தெரியும். ஏனெனில் இத்தகைய பாடலை நம்மக்கள் 'ஓதிடும் மனேநிலையில்' இல்லை. எனினும் திருவருள் துணை செய்தல் மக்கள் ஓதி நன்மை பெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

# பண்ணின் இசையால் பரமனைப் பாடி வேண்டியன பெற்றபதிகம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப் பாவையரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர் செல்வத்தை மறைத்துவைத்தீர் எனககொருநா ளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறுங்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் திரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து ஊர்களில் புகுந்து அங்கு இரந்து உண்டு பலபல பதிகங்களைப் பாடி பாவைபோல இயல்புடைய பெண்களை கிறிபேசி அதனாலே மற்றையோர் பாவத்தை ஏற்று குற்றமே குணமாகக் கொண்டு ஒருவருக்கும் தெரியாதபடி திரிவீர். செத்த மக்கள் (பிரமன் திருமால்) அவர்களது எலும்பை அணிந்து இடபத்தை வாகனமாகக் கொண்டு உலகெங்கும் நீர் திரிவீர். ஆனால் எனக்கு உற்ற செல்வத்தை மறைத்து வைத்தீர். அது நீதியன்று எனக்கு வேண்டியது தருவதற்கு என்மீது சற்று இரங்கியருள்வீராக. உம் அடியேனுக்கு முத்துமாலைகள் இலங்கி மிளிர்கின்ற மணிகளின் வயிரக்கோவைகள் அவை நான் தரித்துக் கொள்ளும்படி தந்தருளி எனது உடம்பிற்கு இனிதாகும் படியான வாசனை மணக்கின்ற கஸ்தூரி கலந்த வாசனைச் சாந்தும் கிடைக்கும்படி கட்டளையிட்டருளவேண்டும் கடல் சூழ்ந்த திருநாகைக் கரோணம் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளிய எம்பெருமானே!

பத்தூர்புக்கு என்பது பல ஊரும் தனதாகக் கொண்டான் சிவன். அங்கங்கு பிச்சைக்கே உழன்று திரிவான் தனக்கென்று ஒன்றுமில்லாதவன் என்பது பொருள். எல்லாம் தனதாகக் கொண்டவன் தான் பிச்சை ஏற்றது பிற உயிரைத் தன்னை எட்டும்படி செய்யும் தலையான செயல் என்பதாகும்.

இரத்தல் இழிந்ததாயினும் பிற உயிரை உயர்த்தும் பொருட்டு இறைவன் அவற்றைப் புரிகின்றார். பாவையர் என்பது தன்னைத் தொழும் அடியாரை என்றதாகும். அடியார்கள் எல்லாம் தம்மைப் பெண்ணாகவே கருதுவார்கள்.

சம்பந்தர் திருப்பதிகங்களில் பல விடமும் தம்மைப் பெண்ணாகவே கருதிப் பாடியமை காண்க. மாணிக்கவாசகரும் "கேட்டாயோ தோழி கிறி செய்த வாறொருவன்" என்கின்றார்.

கிறி செய்தல் என்பது தன் நிலை கெடச் செய்தல்; வாழ்வு அறவொழித்தல் என்றதாகும். கிறிபேசி படிறுஆடித்திரிவீர் என்றது எல்லாம் உயர்ந்த தத்துவக்கருத்துக்களாகும்.

ஐம்புல வேடரின் மயக்கத்தில் நிற்பாரை அந்நிலை நீக்கிட வேண்டி கிறிபேசுதல் பேசாதன பேசுதல் என்றதாகும்.

செல்வத்தை மறைத்து வைத்தீர் என்றால் தனக்குரிய செல்வம் தரப்படாமல் அருள் நீக்கப்பட்டது. ஆனால் உண்மை தெரிந்த பின்பு அவைதரப்படல் வேண்டும் என்பதே விண்ணப்பமாயது. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவினெனைத் தீற்றி விருத்திநான் உமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப் பகட்டநான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும் திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

வேம்பு போல் கசப்பான செயல்களையும் துயரங்களையும் கரும்புபோல் இனிப்பான மகிழ்வான செயல்களையும் உண்டுபண்ணி அவற்றை என்னிடம் வரச்செய்து அநுபவிக்கப்பண்ணி இதனுள் நீங்க நான் உமைவேண்ட அன்று திருத்துருத்தி என்னும் தலத்துள் இருந்தீர்! பாம்புடனே படர்ந்த சடைகள் அவை பலவற்றைக் காட்டி வெருட்டி என்னை உம்மை அணுகாமல் பண்ணிட நான் உம்மைவிட்டுப் பிரிவேனோ பலகாலும் உம்முடன் உழன்றேன். சேம்புடனே செங்கழுநீர் மலர்கள் குளிர்ந்த கிடங்கில் திகழுகின்ற திருவாரூர் என்னும் தலத்தில் புகுந்திருந்த நெருப்பின் வண்ணமுடையீர் நீரேயாகும். ஆனதினால் அடியேற்கு காம்புகளுடன் கூடிய பீலிக முதலியன சேருமாறு பணித்தருள வேண்டும் கடல் நாகை காரோணம் என்னும் சிவதலத்தில் வீற்றிருந்த கடவுளே!

வேம்பு கசப்பு துன்பங்கள் கரும்பு இனிப்பு மகிழ்ச்சிக்குரிய செயல்கள் இவை யாவும் இறைவனால் தரப்பட்டன. நாம் அவற்றிற்கு பொறுப்பாளி அன்று. தீமை நன்மையாவும் அவன் அருளே என்றபடி. இன்பத்தின் பின் துன்பமும் துன்பத்தின் பின் இன்பமும் மாறிமாறி வருவன என்பதால் விரவி எனைத் தீற்றி என்றார்.

பாம்பினொடு படர்ந்த சடைகள் இவை காட்டி வெருட்டிப் பகட்டுதல் என்பது திருவருளின் அருமை காட்டி என்றவாறு. கிட்ட நெருங்க முடியாதபடி வெருட்டி.

சேம்பு என்பது ஒருவகை வாழை; நீர் கிடங்குகளில் காணப்படுவது. கண் இழந்த துன்பம் சகிக்கமுடியாது திருத்துருத்தித் தலத்தில் புகுந்து நீர் இருக்கிறீர் எனக் கேட்க இருக்கிறேன் சென்றுவா என்று அசரீரி அருள் செய்த வரலாற்றில் துருத்தி புக்கு அங்கிருந்தீர் என்கிறார்.

காம்பினொடு நேத்திரங்கள் என்பது கைப்பிடிகளுடன் கூடிய மயிர் பீலியால் செய்த ஆலவட்டங்கள். 2

பூண்பதோர் இளஆமை பொருவிடையொன் றேறிப் பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காணப்
பாண்பேசிப் படுதலையிற் படுகொள்கை தவிரீர் பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வள்வளைகள் கொண்டால் வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்தநெடு வீதிக் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

தேவரீர் பூண்பது ஒரு இளம் ஆமையோடு போரிடும் இடபம் ஒன்றின்மீது ஏறிக்கொண்டு இவற்றுடன் இடபம் ஒன்றின்மீது ஏறிக்கொண்டு பாம்பு எலும்புமாலை தாங்கியரும் காணும்படி தாழ்ச்சி பேசி இறந்தார் தலையில் பலிகொள்வதை நீர் தவிர மாட்டீர். பாம்போடு படர்ந்த சடைமீது இளம்பிறை வைத்த பண்புடையீர். வீணான வார்த்தைபேசி பெண்களின் கைவளையல்களை நீர் பெற்றுக்கொண்டால் மலையரசன் புத்திரியாய உமையம்மை இவற்றைப் பொறுக்குமோ சொல்லீர். காண்பதற்கு இனியவான மணிமாடங்கள் நிறைந்த நெடுவீதிகளை உடைய கடல் நாகைக் காரோணம் என்னும் தலத்தில் வீற்றிருந்த நீரே!

எம்பெருமானுடைய திருவடிவங்களின் அற்புதசீலங்களும் அவருடைய இயல்புகளும் பேசுகின்றார். பொல்லாத வேடங்கள் என்றது எலும்பு மாலை பிறை பாம்பு படர்ந்த சடை இவையாகும். பாண்பேசி என்றது இழிந்த வார்த்தைபேசி என்றவாறாகும். வளவளைகள் என்பது அடியார்களை அடிமை கொள்ளும் அகப்பொருள் துறையாகும். வெற்பரையன் மடப்பை உமை பொறுக்குமோ என்பது அருளினை உணர்ந்தவாறாகும். 3

விட்டதோர் சடைதாழ வீணைவிடங் காக வீதிவிடை ஏறுவீர் வீண் அடிமை உகந்தீர்
துட்டரா யினபேய்கள் சூழநடம் ஆடிச் சுந்தரராய்த் தூய்தியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார் குழல்மடவார் தம்மைமயல் செய்தல் மாதவமோ மாதிமையோ வாட்டம்எலாந் தீரக்
கட்டியெமக் கீவதுதான் எப்போது சொல்லீர் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

விரித்துவிட்டதொரு சடை தாழவும் வீணை ஏந்திய அழகிய திருக்கோலமுடையராக திருவீதியில் இடபம் ஏறுவீர். வீணான அடிமையை நீர் உகந்து ஏற்றுக்கொண்டீர். துட்டர்களாயின பேய்கள் சூழும்படி திருக்கூத்தாடி சுந்தரவண்ணமுடையராகிய தூய இளம்பிறையைச் சூடுதல் உமக்கு பொருத்தமாமோ? வட்டமாக வார்ந்த கூந்தல் உடைய பெண்களை மயக்கம் செய்தல் பெருந்தவமோ அன்றி பெண்மயக்கோ? அடியேன் கொண்ட வாட்டம் எல்லாம் தீரும்படி செய்து எமக்கு நற்பயன் தருவதுதான் எப்போது சொல்வீராக கடல் நாகைக் காரோணம் என்னும் தலத்து பொருந்தி இருந்த எம்பிரானே!

வீணை திருக்கையில் ஏந்தி அழகிய சாமகானம் பாடுதல் எம்பிரானுடைய செயலாகும் வீதியில் விடை ஏறி அருள்தரலால் வீதிவிடை ஏறுவீர் என்கின்றார். வீண் அடிமை என்றது ஒன்றும் போதநாயேனை ஆட்கொண்டமையால் வீண்அடிமை என்றார். பேய்கள் துட்டத்தனமுடையன ஆனால் பேயுடன் கூடி நடமாடல் சுந்தரம் மிகுந்த கோலமாயது;

வட்டவார் குழல் மடவார் தமைமையல் செய்வது திருவருளின் கடாட்சம் பெறும் அகப்பொருள் துறையாகும், மாதவம் என்பது அருள் செய்தல் தவநெறிக்குரியதோ என்றபடி. தன்நிலை கெடச் செய்தலே மையல் செய்தல் என்றபடி; இங்கு உலகம் என்று பேசமுடியாத அருள்நெறி புலப்படுத்தியவாறுகும்;

உலகில் நானும் ஒருவனாக நின்று வாடுகிறேன். எனது வாட்டங்கள் தீர எனது திருவருட் பேறுகள் கிடைக்கும் என்றபடி. 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றும் சுந்தரனே கந்தமுதல் ஆடைஆ பரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும் பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

மிண்டுகள் பல செய்து திரிந்து உழன்று கண்டார் வெறுக்கும்படியான செயல்களே செய்து வினையின் கேடுகள் பலபேசி வேண்டியவாறு திரிவீர். தேவரீர்க்கு தொண்டே செய்து திரிவேனை என் தொண்டு மேல் நிலைப்படுமாறு தலைக்கொள்ள வைத்திடும் அழகிய வண்ணம் உடைய பெருமானே வாசனை உடைய திரவியம் பட்டாடை ஆபரணங்கள் முதலியன உமது பண்டாரத்திலிருந்து அடியேன் பெறுமாறு பணித்தருள வேண்டும். முன்னர் அப்படியாகச் செய்ய வேண்டும் என்ற பிரமாணம் ஒன்று உண்டுதானே! உம்மைக் கண்டார்க்கும் காண்பரிதாகிய நெருப்பாகி நிமிர்ந்து நிற்கிறீர் கடல் நாகைக் காரோணம் என்னும் தலத்திருந்த பெருமானே!

உமது தொண்டே செய்தல் பாடுதலாகும் என்றமையால் தொண்டாடித் திரிவேனை என்கிறார். தொழும்பு தலைக்கேற்றும் என்றது என் தொண்டுகள் என்னைத் தலைமைப்பாடாக வைக்கும் என்றவாறு பூசித்தபலன் வீண் போகாது என்றபடி.

மிண்டாடுதல் என்பது செய்யத்தகாதன செய்தலைக் குறிக்கும். திருவருள் வசம் உலக நோக்கல்லாது புறமாகவே இருக்கும் என்றபடி.

பண்டாரத்தே என்றது இறைவனுடைய அருட்செல்வத்தைக் குறிக்கும். கந்தம் என்பது வாசனை இறைவன் அருளால் அவன் அடியார்கள் தூயவாசனை போலும் இயற்கை மணம் உடையர்.

அதுவன்றி அணிதற்குற்ற வாசனை ஆடை முதலியவற்றை இறைவன் அருளால் தருமாறு வேண்டுகின்றார். பண்டுதான் பிரமாணம் என்றது முன்புள்ள தொடர்பால் என்றவாறு. திருக்கைலை நீங்கிவரும்போது ஏற்பட்ட தொடர்பு. கண்டார்க்கும் காண்பரிய கனல் என்றது சோதியாய் தோன்றும் உருவத்தைக் காண்பாருமே காணமுடியாத அருமைப்பாடாகும். அதுவாயிருந்து காண்பது:

இது பிரம விட்டுணுக்களாக அவர் போரின் நடுவே சோதியாகித் தோன்றி நின்றவகை பேசப்படுகின்றது. கண்டார்க்கும் அடிமுடி காண்பரிய கனல் அதுவேயாகும்;

சோதியாய் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே ஆதியே நடுவே பந்தம் அறுக்கும் ஆநந்தமாகடலே தீது இலாத நன்மைத் திருவருட் குன்றே யாது நீ போவதோர் வகை எனக்கருளாய் வந்து நின் இணையடி தந்தே என்றவாறு கண்ட பிரமா விட்டுணுவும் அங்கு அருளிலாமல் அடிமுடி காணமுடியாது போய்விட்டது என்றதாகும். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவவிதழ் வாய்உமையோ டெருதேறிப் பூதம் இசைபாட இடுபிச்சைக் கெச்சுச்சம் போது
பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம் பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறே
உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர் வேண்ட உண்டருளிச் செய்ததுமக் கிருக்கொண்ணு திடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

இலவம் பழம் போலும் வாய் உடைய உமையம்மையாருடன் எருதின்மேல் ஏறிப் பூதங்கள் இசைபாட இடுகின்ற பிச்சையை விரும்பி பகல் பொழுதில் பல இல்லம்புகுந்து உழலுவீர். பட்டாடையுடன் சந்தனம் நாம் பெறும்படி பணித்து அருள் செய்யாதிருக்கின்றது எக்காரணமோ? இது என்ன வஞ்சனையோ? உலவுகின்ற திரைகளை உடைய கடலில் எழுந்த நஞ்சை நீர் உண்டு அருள் செய்தது உமக்கு இருக்கமுடியாத நிலையிலோ? கலவும் தோகை உடைய மயில்கள் போலும் இயல்புடைய பெண்கள் நடமாடுகின்ற செல்வம் நிரம்பிய கடல் அருகே உள்ள நாகைக் காரோணம் என்னும் தலத்து அமர்ந்த பெருமானே!

உச்சம் போது என்பது நண்பகலைக் குறித்தது. பிச்சைக்கு உழல்தல் திருவருள் செறித்திடும் கடாட்சமாகும்.

நஞ்சை தேவர் வேண்ட உண்டருளியது இருக்க முடியாத நிலையிலோ என வேடிக்கையாகப் பேசுகின்ருர். 6

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல் தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரைஎடுக்க அடர்த்துத் திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

தூசுடுத்திய அகன்ற அல்குலை உடைய தூயமொழிபேசும் பரவை அம்மை என்மீது கொண்ட வெறுப்பு அது தொலைந்து போகாத காலத்தில் அடியேன் வேண்டுதலின் சொல்லுக்காக வந்த நீரே தேசு நிரம்பிய இலங்கைக்கு அரசன் இராவணன் திருக்கைலாயமலையை எடுத்திட அவனை மலைக்கீழ் தங்கப்பண்ணி அடர்த்துவிட அவன் அந்நிலையில் திவ்வியமான கீதம் பாடிட அதற்கு இரங்கி அவனுக்கு தேருடன் வாளும் கொடுத்தீர். உம்மிடத்து நேசமுடைய அடியவர்கள் வருந்தாதிருக்கும்படி உணவு உண்டிட அன்று திருவீழிமிழலையில் வைத்து நித்தலும் படிக்காசு கொடுத்தருளினீர். இன்று தேவரீர் அவ்வணமே அருள்செய்ய வேண்டும் கடல் நாகைக் காரோணம் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளிய எம்பிரானே! திருவீழ்மிழலையில் பஞ்சத்தில் படிக்காசு கொடுத்த வரலாறு சொல்கின்ருர். அன்று ஞானசம்பந்தர்க்கும் திருநாவுக்கரசர்க்கும் நித்தலும் கிழக்கு மேற்குப் படிகளில் காசு கொடுபட்டது. சுசலநிலையில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக இவ்வாறு நடைபெற்றது. இந்த அருள் வரலாற்றை இங்கு நினைவுபடுத்துகின்ருர். அன்று அவர்கட்கு அப்படி அருள் செய்த நீர் இன்று அடியேற்கும் அவ்வணமே அருள் செய்ய வேண்டும் என்கின்ருர்.

பரவை அம்மையார் எம்பிரான் சுந்தரருடன் சங்கிலி காரணமாக வெறுப்புக் கொண்டதும் அந்த நிலையை ஒருவராலும் தீர்க்க முடியாத காலத்து சிவன் வந்து தூது போனதும் சொல்லப்படுகின்றது. 7

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீர் இருந்தீர் வாழ்விப்பன் எனஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேற் றிருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர் அணியாரூர் புகப்பெய்த அருநிதியம் அதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும் தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீர்ர.

நான் உரைக்கும் வார்த்தைகளுக்கு எதிர்மாறுகவோ அல்லது சாதகமாகவோ எந்த ஒரு வார்த்தையும் உரைப்பீர் அல்லீர். வீணே இருக்கிறீர். ஆனுல் உன்னை வாழ்விப்பன் என ஆண்டீர். உமக்கு நான் வழிவழி அடிமையாவேன். நீரோ நல்ல செல்வமுடையீர் வறுமை உடையீர் அல்லீர். அழகிய திருவாரூரில் தங்கி இருக்கும்படியாக உள்ள செல்வம் அதனிலே மூன்று பங்கில் ஒரு பங்கு நமக்கு வேண்டும். அதைத் தராதிருந்தால் இவ்விடம் விட்டு ஒரு போதும் அடியெடுத்து வைக்கேன் அதற்கு சம்மதியேன். காற்றைப் போல வேகமாகச் செல்லும் குதிரைகள் மீது நாம் ஏறுவதும் வேண்டும். கடல் நாகைக்காரோணம் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளிய எம்பெருமானே.

தான் பாடல் மூலம் வேண்டுதற்கு பதிலாக ஒன்றும வருவது இல்லை என்பதை மாற்றமேல் ஒன்றுரையீர் என்கிருர். என்று கடவுள் சிவன் உண்டோ அன்று தொட்டு வழிவழி அடிமையாகதான் உள்ளேன் என்பதைத் தெளிவுபடுத்துகின்ருர் எம்பிரான் சுந்தரர். திருவாரூரில் இருந்த செல்வத்தில் (அருள்) மூன்று பங்கில் ஒரு பங்கு தர வேண்டும் எனக் கூறுவது காண்க. 8

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலிஉண் பெருவயிறன் கணபதிஒன் றறியான் எம்பெருமான் இதுதகவோ இயம்பி யருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகில் திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

மண் உலகமும் வான உலகமும் உமது ஆட்சிக்குட்பட்டது. உமது சத்தியாகிய மலை அரசனின் புத்திரியாய உமையம்மையார் சிறுவன் முருகனையும் நாம் தேறேன். எண்ணமிலாது பலவும் உண்கின்ற பெருவயிறுடைய கணபதி (விநாயகன்) அவன் ஒன்றும் தெரிய மாட்டான். எம்பெருமானே இது எல்லாம் தகவுடையதாமோ ஏன் உமது புத்திரர் இப்படி. என ஒரு வார்த்தை சொல்லி அருள் செய்வீராக. திண்ணமாக எனது உடலிற்கு விருத்தி நீர் தராதிருப்பீர் ஆகில் திருமேனி வருந்தவே உம்மை வளைக்கின்றேன். நாளை நீர் இப்படி செய்யும் என்னை கண்ணறையம் கொடும்பாடன் என்று சொல்ல வேண்டாம் கடல் நாகைக் காரோணம் என்னும் தலத்தில் மேவி இருந்த நீரே.

திருமேனி வருந்த என்பதுதான் வருந்தினுல் கூட இருக்கும் நீ வருந்தாயோ என்பது குறிப்பு. தனக்குற்ற குறைகளால்தான் வேதனைப்பட்டு வருந்தாது இருப்பீரோ என்பதை திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் என்கின்ருர் பேரூலும் இதன் அற்புத மகிமைகளை யார் அறிவார்கள்.

இவர்கள் வார்த்தைகள் வேதம் போல்வன. இறைவனை உணர்ந்து பாடி வேண்டியது பெறும் வல்லபம் பற்றி நாம் என்ன மேற்கொண்டு சொல்லலாம்.

மண்ணுலகு விண்ணுலகு எல்லாம் உமது கைவசம் அவ்வணமாக அடியேனுக்கு அருளாதிருப்பது ஏற்குமோ என்கின்ருர். 9

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர் மாநிதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள் கிறியும்மாற் படுவேனே திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும் கடல்நாகைக் காரோகணம் மேவியிருந் தீரே.

மான் கன்றை ஏந்திய திருக்கையை உடையீர் பெண்ணை கங்கையாக மேல் வைத்தீர் பெரும் செல்வம் தருவேன் எனக்கூறி ஆண்டு கொண்டீர். கிறி (இகழ்ச்சி) போல் வார்த்தைகள்பேசி திருக்கீழ் வேளூர் என்னும் தலத்தில் புகுந்து இருந்தீர் எம் குருமணியே! இனியும் துயரமான துன்பங்களை உம்மால் படுவேனே! உம்முடைய திருஉடைய ஆணை உண்டேல் பொறிபொந்திய நல்ல புகர்கொண்ட பொன்னின் வாள் மேலாக ஓர் பொற்புடைய பூவும் பட்டிகையும் அடியேற்கு தந்தருள வேண்டும். கறிபொருந்திய நெய் கலந்த சோறு முப்போதும் நான் உண்ணல் வேண்டும்; கடல் நாகைக் காரோணம் என்னும் சிவ தலத்தில் வீற்றிருந்தருளிய எம்பெருமானே!

தம்மை ஆண்டு கொண்டருளிய அற்புதம் பேசுகின்ருர். தமக்குற்ற துன்பங்களை நீக்குதல் ஆண்ட முதல்வரின் கருணையாகும். இல்லாதிருந்தால் என்செயலாகும் என்றபடி. 10

பண்மயத்து பொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றுய பெருமானே மற்றுரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும் ஒளிமுத்தம் பூணூரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்
றன்மயத்தால் அணிநாவ லாரூரன் சொன்ன அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள் பவரே.

பண்ணின் மயம்போலும் இனிய வார்த்தை பேசுகின்ற பரவைக்கும் சங்கிலிக்கும் பற்றுய பெருமானே உம்மை அன்றி மற்றுயாரை அடியேன் தஞ்சமாக உடையேன் என் உள்ளத்து உள்ளாகிய வண்ணமுடைய உமக்கு நான் அடியேன். என் குறைகள் தீர்த்தருள வேண்டும். ஒளி உடைய முத்துக்களில் ஆகிய மாலைகளும் நல்ல பட்டும் பூவும் கண்ணுக்கினிமை உடைய கத்தூரி வாசம் கமழும் சந்தணப் பூச்சும் வேண்டும் கடல் நாகைக் காரோணத்தி மேவி இருந்த பெருமானே நீர் என்று குளிர்ந்த நீர் வளத்தால் ஓங்கிய அழகிய திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூரன் சொன்ன அரிய தமிழ்கள் இவை கற்று ஓதிட வல்லார்கள் தேவஉலகை ஆண்டு கொள்வார்கள். 11

சிவ சிவ.

---

## எல்லோரும் இறைவனை என்றே ஒருநாள் அடைவது நிச்சயம் என்பது சைவ சித்தாந்தம்

கடவுள் இப்பூமியை நீரை நெருப்பைக் காற்றை வான்வெளியில் உள்ள சந்திர சூரியரைத் தோற்றுவித்த நோக்கம் அநாதியாக இருளிலே மூழ்கிக் கிடக்கும் உயிர்களை உடல் கரணங்கள் அவற்றினூடு போகங்களைத் தந்து தன்னை உணரச் செய்து முடிவில்லாத பேரின்பத்தை அருளும் நோக்கமேயாகும்.

இதனை யாவரும் பெறஉறும் ஈசன காண்க என்கின்ருர் மாணிக்கவாசகர் இந்த உலகில் எந்தச் சமயத்தவராயினும் உண்மை நெறியை அடையப்பண்ணி வீடுபேற்றில் சேர்த்தல் இறைவனின் திருவிளையாடல்.

இதன் உண்மை தெரிந்துதான் இங்கு யார் பெரியர் யார் சிறியர் என்னுது மகான்கள் எல்லோருடனும் அன்பு பாராட்டி வந்தனர். ஈசனடிக்கு அன்புடையார் எவருடனும் பகை புரியார். இதுதான் சைவசித்தாந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குற்ற செல்வம் நாய் அறியாது போல நோயுற்று மூத்திருந்தேன் என்கிறார் மாணிக்கவாசகர்

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நாய்க்கு செல்வமுண்டு அதை நாய் அறியாது அலைந்து திரிந்தது. நாய் பின்னர் என் செய்யும் சோம்பல் மிகுதியால் வீணே துன்பப்பட்டு அறிவிழந்து பிறர்க்கு அடிமையாகியது. இதனை ஒரு கற்பனையாக மாணிக்கவாசகர் உணர்ந்து திருவருள் செல்வம் உண்டு என்பதை உணர்ந்தும் நான் அதை அறிய முடியாது உலகில் வாழ்ந்து நோய்க்கு விருந்தானேன் என்கின்றார்.

இதே கருத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தம்மை ஆண்டருளிய பிற்பாடு விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை வேண்டேன் மானிட வாழ்க்கை ஈதாகில் என்கிறார். மெய்ப்பொருள் என்றது அழிபாத நித்தியவஸ்து விவேகமான கடவுள் நிலையாகும். இது மன ஒருமைப்பாட்டால் வரும். இந்த ஒருமைப்பாடு கிட்ட இலகுவில் முடியாது; அழிவிலாத நித்தியப் பொருளாய கடவுட் தன்மையை மன ஒருமைப்பாடு கைகூட்டிடும். ஆனால் மனித வாழ்வில் உலக பாசங்களால் மிகுந்து துயரப்பட்டு அல்லல்படும் போது அதன முடிவு நோய்க்கு விருந்தாகிறது. இதனை பின்னரும் சுந்தரர் பெருமான் கூறிடும்பொழுது எம்பிரானே நான் மானிடவாழ்க்கையை வேண்டாம் என்று இழித்தேன். அப்படியான நிலையில் எனக்கு உய்வகை அருளாய் எனக் கேட்கின்றார். மனம் பூரண அமைதியில் நிலைபெற கடவுள் அருள்தான் வேண்டும்.

இதனை சிவப்பிரகாசத்தில் பின் வரும் பாட்டால் தெளிவு படுத்துகின்றார்.

முந்திய வொருமையாலே மொழிந்
தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்
திடல் அது தானாக
வந்தவாறெய்தல் நிட்டை
மருவுதல் என்று நான்காம்
இந்த வாறடைந்தோர் முத்தி
யெய்திய இயல்பினரே.

இப்பாடலை நோக்கினால் உண்மைப் பொருளாய் என்றும் அழிவிலாத பூரணப்பொருளை அடையும் மார்க்கம் முதலில் கேட்டலாகும்.

இதனை திருநாவுக்கரசரும்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள் பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் அன்னையையும் அப்பனையும் அன்றே நீத்தாள் அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே என்கிறார்.

இதனை ஞான உணர்வு பெறின் குல ஆசாரம் சமய ஆசாரம் உலக ஆசாரங்கள் யாவும் கெடும் இதனையே அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை என்கிறார்.

தன்னை மறந்தாள் என்றபோது தனது உடம்பைப் பற்றிய ஞாபகம் இல்லாது போயிடும். இதனைக் அருணகிரியாரும் நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டது இவ்வுடம்பு என்கிறார்.

மனம் ஒருமைப்பாட்டிற்கு உடம்பைப் பற்றிய எண்ணங்களும் உடம்பு தான் என்ற எண்ணங்களும் வேறு மண் பொன் ஆசைகளும் பெரும் அல்லலை மனச்சிதறலை அலைவை ஏற்படுத்துவன.

தந்தை தாய்தமர் தாரம் என்ற பந்த நினைப்புகளும் மன ஒருமைப் பாட்டைச் சீர்குலைப்பன. ஆதலினால் இந்த பாச அல்லல்கள் நோய்க்கே விருந்தாகிவிடும் என்றதால் திருவருள் நிலைகேட்டபோதே அன்னையையும் அத்தனையையும் அன்றே நீத்தாள் என்கின்றார். சிவனை அறிந்த சித்தி இதுவாகும்.

இதனை மாணிக்கவாசகரும் பாச வேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமாபற்றெனக்கருளி பூசனை உவந்து என் சிந்தையிற் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே என்கிறார்.

ஆம் அலையும் மனத்தை அடக்கி விழுங்கவல்லது திருவருள் ஒன்றேயாகும். இதனை யானாகிய என்னை விழுங்கி வெறும்தானாய் நிலை நின்றது தற்பரமே என்கிறார் அருணகிரியார். இந்த மன ஒருமைப்பாட்டை பெறுவதற்கு நிட்டை வேண்டப்படுகிறது. உலக பந்தங்களில் மனம் மெதுவாக விடுதலையடைதலாகும். தலைப்பட்டாள் இறைவன் தாளே! என்றது எல்லாவற்றையும் தாங்கியருளும் இறைவன் திருவருள் நிலையைப் பெற்றுக் கொள்ளலாகும்.

இதனை திருவள்ளுவரும் தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லாது மனக்கவலை மாற்றல் அரிது என்கிறார்.

மன ஒருமைப் பாட்டைப் பெறற்கு மனக்கவலை பெரும் அல்லலைத் தந்து நிற்கும். அந்தச் சஞ்சலம் நிந்தமும் பெருகப்பெருக மனம் சாந்திப்படாது. ஆனதினாலே மன ஒருமைப்பாட்டுடன் வாழ்வதற்கு ஈசன் தியானமே என்றும் அவசியமாகும் என்பது பெரியோர்கள் குறிப்பாகும்.

மனம் ஒருமைப்பாடுடையவர்க்கு ஆவதும் அழிவதுமான சஞ்சலங்கள் இல்லை. இதனை மாணிக்கவாசகர் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்! போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின் என்கின்றார். இதுதான் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நிலைபெறலாகும்.

இந்தச் செல்வம் எல்லோருடனும் கூடவே இருக்கின்றது. ஈசன் அருள் யார்க்கும் உண்டு என்பதை அதை அழிவிலாச் செல்வம் என்பதையும் மாணிக்கவாசகர் வலிஉறுத்தி நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணம் என்கின்றார்.

இந்த திருவருள் நிலைப்பேறெய்திய சுந்தரர் பெருமான் பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகாவரம் பெற்றேன் என்கின்றார். ஈசன் அருள் கைகூடப்பெற்றார்க்கு ஏதும் கவலை இல்லை என்பது பொருளாகும்.

பேயாய்த் திரிந்தெய்த்தேன் என்றது நிலையற்ற பொருளை நிலையாகக் கொண்டு களைத்துவிட்டேன் என்றதாகும். பெறலாகவரம் பெற்றேன் என்றது திருவருள் நிலைப்பேறுற்றதாகும்.

அடி தாள் பாதம் இரட்சை அடையாளம் இத்தனையும் ஒரு பொருளேயாகின்றது.

அடி என்பது மூலம் பாதம் என்பது யாவையும் தாங்குதல் நிலை என்பதும் தாங்குவதுவேயாகும். இரட்சை என்பது யாவற்றையும் காத்துத் தாங்குவதுமாகும். அடையாளம் என்பது இலக்காயகுறியாய் இருப்பது ஆகவே இவையாவும் ஒரு பொருளையே குறிக்கின்றன.

இதனையே மாணிக்கவாசகரும் ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு நன்றாக வைத்து என்னை நாய் சிவிகை ஏற்றுவித்த என்றாதை தாதைக்கும் எம் அனைக்கும் தம்பெருமான் குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ என்கின்றார்.

ஆதலால் நாயுற்ற செல்வம் நயந்தறியாவண்ணம் எல்லாம் தாயுற்று வந்து எம்மை ஆண்டு கொண்டு என்று பாடியமையாகும். தாய் தன் பிள்ளையை மேல்பட வைப்பதுபோல் இறைவனும் கருணையால் குருவாகி வந்து தாயாகி ஆண்டான் என்கிறார். பஞ்சபூதங்களின் உரிமை கொண்டாடும் உடம்பைத்தான் என்று கருதிக்கொள்ளும் வரையும் பரத்தினது நிலைபொருந்தமுடியாது.

மனத்தை எப்படி அடக்குவது?

வாங்கிப் பொறி ஐந்துள் நின்ற
மனம் தன்னை
நீங்காதகத் திருத்து உந்தீபற
மாயும் மனப்பேய் என்று உந்தீபற.

மனம் பதைத்தெழாது உள்ளம் புதைப்பாய். மனம் பதைக்கில் அங்கங்கே வதைப்பாய் என்றதாகும்.

## அருணகிரிநாதர் பாடியருளிய திருப்புகழ்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பாசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

நாதம் விந்து எனப்படும் கலைகளுக்கு மூலப்பொருளே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; வேதங்கள், மந்திரங்கள் இவைகளின் வடிவாய் விளங்குபவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; ஞான பண்டித சாமியே உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; பலகோடிக்கணக்கான —

திருநாமங்களை உடைய சிவபிரானது மைந்தனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; உயிர்களுக்குப் போகத்தை ஊட்டும் பராகாச வடிவியாம் தேவி பார்வதியின் பாலனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்—பாம்பைக் காலில் அடக்கிக் கட்டியுள்ள மயில்வாகனனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன் — அன்னியராம் சூராதிகளைப் —

சேதித்து (அழித்துத்) தண்டித்த திருவிளையாடலைப் புரிந்தவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; இசையொலி காட்டும் கிண்கிணியை அணிந்த திருப்பாதங்களை உடையவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; ஆண்மை நிறைந்த வீரனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; மலைகளுக்கு வேந்தனே! —

திருவிளக்குகள் காட்டும் மங்களகரமான ஜோதியே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; பரிசுத்தமான பரவெளியில் விளையாடுபவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன், தேவயானையைப் பக்கத்திற் கொண்டவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; (உனது) திருவருளைத் தந்தருளுக.

இரப்போர்க்கு, ஈதல் கொடுத்தல்), பலவித விசேட பூஜைகள், நூல்களை ஓதல், நல்ல குணம், ஆசாரம், நீதி, கருணை, குருவின் அழகிய பாதசேவை — ஆகிய இவைகளை மறவாத சோழ மண்டலத்தில் உள்ளதும்.

ஏழு பூமியில் உள்ளோரும் புகழ்கின்ற காவேரி நதியால் செழிப்புற்று வளம் பெருகும் சோழமண்டலத்தில் உள்ளதுமான மனதுக்கு இன்பகரமான ராஜகெம்பீரம் என்னும் நாட்டுப் பகுதியை ஆண்டருளும் நாயகனே! வயலூர் அண்ணலே!

தம்மாட்டு அன்பு வைத்த திருவாரூரர் என்னும் சுந்தரமூர்த்திப் பெருமானது நட்பைக் கூடினவராய், அவருடன் முன்பொருநாள், ஆடலில் வல்ல, விரும்பத்தக்க குதிரை மீதேறி மகா கயிலைக்குப் போய் அங்கே —

'ஆதி உலா' என்னும் அழகிய திருக்கயிலாய ஞானஉலாவை ஆசுகவியாகப் பாடின சேரர் பெருமானும் சேரமான் பெருமானுக்கு உரித்தான கொங்கு மண்டலத்து வைகாவூர் என்னும் நாட்டுப் பகுதியில் இருக்கும் திரு ஆவினன்குடி என்னும் தலத்தில் வாழ்வு கொண்டிருக்கும் தேவர்கள் பெருமாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்-
பூணுகின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் சாமீ நமோநம அரிதான ;
வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம அழகான-
மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்
பாத கஞ்செறி சூராதி மாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடிய
பார அண்டர்கள் வானுடு சேர்தர நினைவோனே
பாதி சந்திர னேசூடும் வேணியர்
சூல சங்கர னார்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர் ;
ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மனோன்மணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி-
ஆவல் கொண்டுவி ருலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமானே.

ஞானோபதேசத்தைத் தந்த தலைவனே! உன்னை வணங்குகின்றேன்—வணங்குகின்றேன்; நீதிக்கு இருப்பிடமாகும் தேவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; பூமண்டலத்தை ஆள்பவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்—அணிகலங்கள் யாவையும்.

அணிகின்ற பெருமானே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; வேடர் குலக்கொடி வள்ளியிடம் ஆசை பூண்டவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; தாமரை மலரில் வீற்றிருப்பவரும் பிரமன் புகழ்கின்ற சாமியே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; அருமையான;

வேதமந்திரங்களின் வடிவு கொண்டவனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; ஞான பண்டித நாதனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; வீரக்கழலை அணிந்த திருவடியாய்! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; அழகான—

திருமேனி விளங்கும் வேளே! உன்னை வணங்குகினறேன்—வணங்குகின்றேன்; தேவருலகில் வளர்ந்த அழகியதோள்களை அணிந்த தேவநாயகிக்கு நாயகனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; வெற்றிப் பொலிவு கொண்ட விசாகனே! உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்; உனது திருவருளைத் தந்தருளுக.

பாதகம் நிறைந்த சூரனாதியர் இறந்து படும்படி கூரிய வேலாயுதத்தாலே போர் செய்து பெருமை பொருந்திய தேவர்கள் வானுலகிற் சேரும்படி அருள் புரிந்தவனே!

பாதி நிலவை அணிந்த சடையினர், சூலப்படை ஏந்திய சங்கரனார், இசைக்கு தலைவர், கனத்த திண்ணிய புயங்களைக் கொண்ட ஒளியினர்; கயிலாய மலையினர்;

ஆதி சங்கரனார் எனப்படும் சிவபிரானது பாகத்தில் விளங்கும் மாது, உமையம்மை, அழகிய அம்பிகை, மாதா, மனோமணி, ஆயி சுந்தரி, உயிர்கட்குத் தாயான நாரணி, அழகி — ஆகிய பார்வதி தேவி

ஆசை பூண்டு பெருமையுடனே உன்னைச் சீராட்ட அழகு பல கொண்ட திருக்கோயில் சிறந்து விளங்கும் திருவாவினன்குடியில் வாழ்வு கொண்டிருக்கும் தேவர்கள் பெருமானே!

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நம்சி வாய வரையேறி
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவிலாமல்
ஓமங்கி உருவ மாகி இருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்
தேனங்கொ ளிதழி யான தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன சோதி
சேர்பங்கி னமல நாதன் அருள்பாலா
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீற
காடந்த மயிலி வேறு முருகோனே
காமன்கை மலர்கள் காண வேடம்பெ ணமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே.

விளக்கம்: அப்பனே முருகா, அடியேனுக்கு ஞானஉணர்வு எய்தும் புலன்கள் கூடி, ஆகாயம், சூரியர், சந்திரர், என உருவநிலைகூட உணர முடியாத நாடாம் பரவெளியே சேர்ந்து நமசிவாய என்னும் ஐந்தெழுத்தாகிய மலைபோன்ற அருளொளி வழிச்சென்று, அதனாலே நாவில் இன்ப இரசமான அருவிபோலும் உன்புகழ் வெளிவர நாத தத்துவங்களோடு கூடிவிளையாடி, ஊனமான உடல், உயிர், மோகம், நான் என்ற தன்மை உணராத ஓம அக்கினி போலும் நாம் இருவோரும் ஓர் நிலையில் பொருந்தி சோதி வடிவாகி,

''உனைநினைந்து நாளும் உருகி அன்பினோடு
உலகமென்று பேச அறியாத
உருவமொன்றிலாத பருவம்''

என வேறு பாடலிலும் இக்கருத்தைக் கூறுகிறார்.

ஞானமயமாகிய மயில்மேல் ஏறி சகல உலகெங்கும் உலாவி வர அருள் தாராய்.

தேன் சொரியும் கொன்றைமாலை, சந்திரன், கங்கை, இவை சடைமீ தணிந்த என் தந்தையானவர், அகிலம் நிறைந்த ஒரு மாதா, வடிவம் ஐந்து உடையவள், அன்புடையவள் யோகியாயிருப்பவள், மௌனஜோதி வடிவானவள் ஆகிய என் தாயை ஒருபாகமுடைய சிவபிரான்; அருளிய பாலனே! காடுகள், மலைகள், தீவுகள், சமுத்திரங்கள் பொடியாக நீல மயில் மீதேறியருளிய என்றும் இளங் கோலமுடையவனே! மன்மதன் கை மலர் காண அப்பாலாகிய தெய்வீக அன்பினால் நிறைந்து வள்ளிநாயகியாரோடும் கூடி பழநியில் அமர்ந்த பெருமானே.

## கரவாகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ என்கிறார் அருணகிரியார்

செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்கல் என்பது முதுமொழி. நில்லாத செல்வத்தைப் பெற்றக்கால் இல்லாதவர்க்கு ஈந்து என்கிறார் யோக சுவாமிகள்.

ஆகையாலே செல்வந்தர்களது கடமை தம்மிலும் பார்க்க வறுமையால் வாடி துன்புறும் மக்களையும் ஆதரித்தலாகும்!

அருணகிரிநாத சுவாமிகள் தமது கந்தர் அநுபூதியிலும் திருப்புகழிலும் வறுமையின் கொடுமை பற்றி நன்கு விரித்தோதி உள்ளார்.

இந்த வறுமையின் கொடுமை என்பது புலிதன் இரைமிருகத்தின் மேல் பாய்தல் ஒக்கும். அடுத்து வறுமை என்பது ஒருவரிடம் தோற்றினால் அவர் நிலை என்னவது என்பதை ஓர் கந்தர் அநுபூதிப் பாடல் மூலமாகத் தெளிவுபடுத்துகின்றார். அதுதான்.

''வடிவும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் குடிபோகிவா அடி அந்த மில்லா அயில் வேல் அரசேமிடி என்றொரு பாவி வெளிப்படினே'' எனக் கூறுகின்றார். இந்த மிடி என்பது இல்லா வறுமை என்றதாகும்.

மிடி என்பது எப்படி ஏன் வருவது எனில் அது காலநிலையால் அல்லது ஊழின் நிலையால் வரும்.

இது ஒருகால் மறைந்திருந்து ஓர் காலத்தில் தன்னுடைய நிலையைக் காண்பிக்கும். அந்த வறுமை வந்து விட்டால் அக்காலத்தில் செல்வம் நிலைக்காது. தொழில் விருத்தி இன்மை உடல் வலிகுன்றிய நில் எடுத்த கருமங்கள் கைகூடாது போதல் இப்படி பல சிக்கல்கள் கடல் அலைபோல் வந்துமோத செய்வதறியாது வேதனைப்பட வேண்டிவரும். அத்தன்மையில் தனது வாழ்விற்கு அல்லது சீவனத்திற்கு பிறர் உதவியையே நாடவேண்டி வந்திடும்.

இப்படியான ஒருநிலை புலவர்கட்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆகையினாலே புலவர்கள் நல்ல கல்வியின் நலம் பெறாத செல்வந்தரிடம் பாடல்பாடிச் சென்று இரக்கவேண்டி வரும்.

இந்த நிலை அருணகிரியார்க்கும் ஏற்பட்டதாக ஒரு திருப்புகழில் அவர் கூறுகின்றார்.

அப்பாடல் பின்வருமாறு.

நூல் அநந்த கோடி தேடி மால் மிகுந்து பாருளோரை நூறு செஞ்சொல் கூறி மாறி—விளை தீமை நோய் கலந்த வாழ்வுறாமல் நீ கலந்து ஞான நூல் அடங்கவோத வாழ்வு தருவாயே.

என்று கூறுகின்றார். இதனைச் சிந்தித்து பார்க்கும்போது செல்வந்தரிடம் சென்று இரப்பதல் சுவையான பாடல் பாடி வசிகரித்து பொருள் விருப்பால் போதித்து நின்ற வரலாறு பேசப்படுகின்றது. அப்படிப் பொருள் வாங்கும்போது பிறரிடம் பெற்ற பொருள் நஞ்சாகி அப்பொருளே நோய் கலந்த வாழ்விற்கு வித்தாகியது என்பதையும் எடுத்து கூறுகின்றார்.

பிறன் பொருள் நஞ்சாகி நம்மை வருத்துவதன் முன்னாக நீ கலந்துள்ளாகும் ஞானநூல் அடங்கவோத வாழ்வு தருவாயே என்கின்றார்.

ஞானநூல் எப்பொழுதும் உண்மைப் பொருளைச் சேரவைக்கும் என்பது பெரியோர் துணிபு. இதை ஞானநூல் ஓதல் ஓதுவித்தல் நற்பொருளைக் கேட்டல கேட்பித்தல் இவைகள் இறைவன் அடி சேர்விக்கும் எழில் ஞான பூசை என்பதாகும்;

இதனை திருநாவுக்கரசரும் ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள், ஆனால் நான் ஞானத்தால தொழு நான் அலேன் என்கின்றார்;

ஞான பூசை என்பது சிந்தையை உள்முகமாக வைத்தலாம். வெளிப்புறத்து நிகழ்ச்சிகளை எண்ணாது சிந்தையை அகமுகமாக்கல் என்பதாகும்; இதனைத்தான் நீ கலந்து உள்ளாகும் ஞானநூல் அடங்க ஓதவாழ்வு என்றதாகும்.

ஆதலினாலே அருணகிரியாரும் தன் வாழ்விற்காக பிறரை இரந்து நின்றபொழுது அவரை மதித்து பொருள் கொடாத நிலையால் அன்னாரை கரவாகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை மெய்ப்பொருளை ஈகுவையோ என்கிறார்.

உண்மைப் பொருளை உணர்ந்து கொண்டார் அல்லது பெற்றுக்கொண்டார்க்கு ஏதும் ஒரு குறையும் ஏற்படாது நத்திய செல்வநதராகவே இருப்பார். இதனால் பிறரை அவர் சென்றிரக்க வேண்டியதில்லை. பிறரைப் புகழ்ந்து உரைக்க வேண்டியதுமில்லை.

இதனை யோக சுவாமிகள் தமது ஒரு பாடலில் ஈயாதபுல்லர் தங்கள் இல்லத்திற்கேகாவண்ணம தாயாரைப் போல் வந்தாண்ட சற்குரு தாழ்கள் வாழ்க என்கின்றார்.

இதன் ஆத்தம் உணமை நிலை உற்றாரை பொருள் தானாகத்தேடி வரும என்றவாறாகும்.

முன்தரப்பட்ட தேவாரத்தை நோக்கினால் சுந்தரர் கடவுள் சிவனிடம் பொருள் வேண்டிப் பெற்றுக் கொள்கிறார் அன்றி அவர் பொருள் பொருட்டால் பிறரை இரந்து போகவில்லை.ஆதலினாலே உண்மைப் பொருளைப் பெற்றால் உலகில் தலையான நிலையைப் பெறுவார்கள்.

## ஆநந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே ஆநந்தமாவோம்

என்றோ ஒருநாள் சிவன் அருள் நமக்கு வந்து கைகூடுமேல் அன்றிலிருந்து நாம் ஆநந்தமயமாவோம் என்கிறார் மாணிக்கவாசகர்.

திருவருள் கைகூடப்பெற்றால் துன்பம் கவலை மரணம் பிறப்பு என்ற இவை யாவும் கடந்த இன்பநிலை எய்தப்பெறும் என்பது குறிப்பு;

எல்லா உயிரையும் ஈசன் தன் கருணையால் வளர்த்து அவர்கட்கு அந்த அந்த பருவத்து உற்ற பக்குவங்களைக் கொடுத்தவாறு இருக்கின்றான் என சாத்திரங்கள் கூறுவன. இதனை அருணகிரியாரும் மேலான உனது அருளைப்பெற்று வாழ்கின்ற தொருநாள் என்றோ என ஆசைபடுகின்றார். உலகமே உருவமே யோனிகள் உறுப்பதாக இலகுபேர் இச்சா ஞானக் கிரியை உட்கரணமாக அலகிலா உயிர் புலன்கட்கு அறிவினை ஆக்கி ஐந்து நிலமிகு தொழில்களோடும் நாடகம் நடிப்பன் நாதன். இத்தகைய கூத்து பரஆநந்த நிலையில் நடைபெறுகின்றது என ஞான சாத்திரங்கள் கூறுகின்றன. நல்ல மலர் கொண்டு நாடோறும் வழிபடல் நம் கடமையாகும்.இந்த தவநெறியாலே சிவன் அருளை ஞானிகள் பெற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சைவப்பிரகாச வித்தியாலய வரலாற்றிற்கு மேலும் விளக்கம்

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பேரில் வெளிவந்த சஞ்சிகை பற்றி சென்ற இதழில் நாம் ஆறுமுகநாவலர் என்ற தலைப்பின் கீழ் கட்டுரை பிரசுரித்துள்ளோமல்லவா. அதனை உணர்ந்த குறிப்பிட்ட சஞ்சிகை வெளியீட்டுக்காரர் தாம் அப்படி ஒரு சஞ்சிகை வெளியிடவேண்டியதற்கு எழுந்த காரணத்தை கீழே தரப்படும் ஓர் கடிதமூலம் அனுப்பிவைத்திருக்கிறார்கள். அக்கடிதத்தில் அவர் விளக்கத்தைக் காணுங்கள்.

நமது நோக்கத்தில் சைவ மக்களிடம் இன்றைய சூழ்நிலையில் வலியுறுத்தப்பட வேண்டிய சிறுமைகளை மறந்து சத்தியம் முதல் எண்வகைச் சீலங்களையும் கடைப்பிடிக்க முயல்வதேயாகும்.

சீலங்களைக் கடைப்பிடிப்பதற்கு சிறு பகைகள் இனப்பூசல்கள் துன்பம் தரும் என்றமையால் அக்கருத்துக்களைத் தெரிவித்தோம்.

உண்மை நிலையை சைவ மக்கள் உணரவேண்டி நாம் நடத்தும் இப்பணியில் நாம் யாருடனும் பகையோ குரோதமோ அல்லது தவறு கண்டுபிடிக்கும் நோக்கமோ கொள்ளவில்லை. கண்டனம் என்ற கோட்பாட்டிலும் நாம் வரவில்லை.

திருவருள் ஒன்று உண்டு. திருவருளுக்கு விசேடமாக அமைவது சீலங்கள் என்றபடியால் யாம் அறிந்த அளவில் திருவருளுக்கு ஏற்கும்படியாக நாம் கருத்துக்களைத் தெரிவுத்தோம்.

இப்பத்திரிகை மக்களிடையே நல் வளர்ச்சியை ஏற்படுத்த விரும்பின் அதன் ஆசிரியர் நடுவு நிலையில் நின்று தான் பத்திரிகை நடத்த வேண்டும். அந்த நடுவு நிலையான நீதி குறைவுபடாது மேலோங்கிட எமது கடமை எம்மீது தவறு காண்பாரிடமும் நாம் அவர் கருத்தையும் பிரசுரித்து எல்லா மக்கள் நல்உணர்விலும் உண்மையை காட்ட முயல்வதேயாகும்.

ஆகையால் இனியும் இணுவில் மக்கள் கட்சி பூசலில் இறங்காது உண்மையை உணர்ந்து பிழைகளை ஏற்கும் மனப்பாங்கை மேற்கொண்டு தணிந்த மனத்துடன் வாழ்வார்கள் சைவசீலங்கள் மேலோங்க வழி காண்பார்கள் என்பதை நினைவில் கொண்டு எல்லா மக்களையும் சமாதானமாக வாழும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய வாதங்களை கைவிட வேண்டுகின்றேன்.

## குறிப்பிட்ட கடிதம்

சந்திரதீபம் பத்திரிகை ஆசிரியர்
அவர்கட்கு
வணக்கம்.

ஐயா,

சென்ற 10-10-81 சந்திரதீபத்தில் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் வரலாற்று நூல் பற்றியும் அதனை எழுதிய நாம் மூவர் பற்றியும் தாங்கள் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை — அபத்தமானவை என்பதை விளக்கி வைக்க வேண்டிய பொறுப்பு நமக்கிருப்பதால் இதனை எழுதுகிறோம்.

தமிழ்ச் சமூகம் அல்லற்படும் இந்த நேரத்தில் இந்நூல் அவசியமற்றது தீங்கானது எனக் குற்றஞ் சாட்டியுள்ளீர்கள்.

இலங்கையில் தமிழினத்திற்குச் சோதனைகள் மிகுந்துள்ள இந்த நேரத்தில் சரித்திர உண்மைகளை நிலைநாட்டும் இந்நூலை நாம் வெளியிட்டமை, யாரும் இப்பாடசாலையை வேறு ஒருவரே நிறுவினர் என்று பொய்ச் சரித்திரம் படைக்க முற்பட்டிருக்காத பட்சத்தில் அவசியமில்லைத்தான். ஆனால் அப்படிப் பொய்யாக அம்பிகைபாகர் என்ற ஒருவரே இப்பள்ளியைத் தொடக்கினர் என்று ஒரு விஷப்பரம்பரை பாடசாலைக்குள் இரவோடிரவாக எழுதிய சந்தர்ப்பத்திலே —

அந்த எழுத்தை மிதிகல்லாகக் கொண்டு பாடசாலைப் பெயரை அம்பிகைபாகர் வித்தியாசாலை எனமாற்றி இச்சமூகக் கலக்கநிலையை சுயநலத்துக்குப் பயன்படுத்திட இச் சமூக விரோதிகள் முற்படும் சந்தர்ப்பத்திலே —

இணுவிலின் சகல மக்களும் அவையன்றி அயலூர் மக்களும் பயனடைவதற்கு மேலும் தடையாக ஓர் ஊர்ப்பெர்துச் சொத்து ஒரு தனிக்குடும்பச் சொத்தாக அபகரிக்கப்பட்டு ஊரே வஞ்சிக்கப்படும் சந்தர்ப்பத்திலே —

நாம் இந்த நூலை வெளியிட்டு உண்மையை நிலைநாட்டி ஊர் ஒற்றுமையை நிலைநாட்டிப் பாடசாலையின் தடைபட்டுக் கிடக்கும் வளர்ச்சிக்கு வித்திட்ட இப்பணி அநாவசியமானது பிழையானதென்று தாங்களும் கருதுவீர்கள் என்று நம்பவில்லை.

தமிழர்களுக்கு அடி உதை விழுகிறது என்பதற்காக ஒருவன் தன் தாயைத் தமிழன் ஒருவன் மானபங்கம் செய்ய எத்தனிக்கும்போது அதனை எதிர்க்க முற்படுவதைத் தவறென்று தங்களிடம் வந்து செய்தி தந்த கனவான்கள் சொல்வார்களா? நம்முன் நாம் அக்கிரமம் செய்வதும் அதற்கு உதவுவதும், அதனைப் பார்த்துக்கொண்டு வாளாஇருப்பதும்தான் நமக்கு அடி உதை விழக்காரணம் என்பதை அக்கனவான்கள் உணர வேண்டும்.

கோயில்கள் பள்ளிக்கூடங்கள் முதலான பொதுநிலையங்களில் ஏகபோகங் கொண்டாட முயல்வோரை அன்பு வழியிலும், முடியாவிட்டால், இப்படியான சொற்சாட்டைகள் மூலமும் திருத்தியோ அடக்கியோ சமூக ஒற்றுமையை சமாதானத்தை அவற்றின் மூலமான வளர்ச்சியை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டு வருபவர்கள் நாங்கள். இதனை ஊரே அறியும். இன்று எங்கள் பாடசாலை தனிமனித ஆதிக்கத்தால் எவ்வளவு தூரம் சீரழிந்து பாழடைந்து கிடக்கிறது என்பதை அளந்தறிய வேண்டுமானல் கல்வி இலாகாவினரையும் நம் மூர்க்கல்விமான்கள் பொதுமக்களையும் அணுகிப்பாருங்கள்.

இந்நூலாக்கத்திற்கு உதவிய இணுவிலின் சகல பகுதிகளிலுமுள்ள கல்விமான்களை இவ்விஷக் குடும்பத்தின் கையாட்கள் அணுகி அவர்கள் இந்நூலில் வெளியிட்ட கருத்துக்கள் பொய்யென்று எழுதிய கடிதங்களில் கையொப்பம் வைக்குமாறு கோரியும் பயமுறுத்தியும் வருவதிலிருந்தே இந்த நெருக்கடியான நிலையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யார் உண்மைகளைச் சாகடிக்க முயல்பவர் ஊரைக் குட்டிச்சுவராக்க முயல்பவர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்படிக்கு
ச. வே. பஞ்சாட்சரம்
மா. ந. பரமேஸ்வரன்
இ. விக்னேஸ்வரன்

இணுவில்
19-10-81.

# இணுவிலின் இனப்பகை என்று தான் நீங்குமோ?

தாவடி
3-10-81

கனம் சந்திரதீபம் ஆசிரியர்
அவர்கட்கு
கொக்குவில் மேற்கு.

ஐயா,

''எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது
அறிவு''

— இது வள்ளுவர் வாக்கு

தங்கள் 1-5-81 திகதியிடப்பட்ட இதழ் 4 சுடர் 12 சந்திரதீபத்தில் 5-ம் பக்கத்தில் இணுவில் பஞ்சகர்த்தா சபையை வாழ்த்துகின்றோம் என்ற தலையங்கத்தில் பஞ்சகர்த்தாக்களில் ஒருவர் மஞ்சத்திருப்பணிக்கு இடையூறு விளைவிக்க முயன்றாரென்றும் அவர் ஒரு சுருட்டுத் தொழிலாளியென்றும் ஷ கோவிலைப் பழுதாக்கும் ஒரு குருக்களின் ஏவற்பேய் என்றும் பலவாறாக இகழ்ந்து எழுதப்பட்ட விடயமொன்று காணப்படுகிறது. தயவு செய்து இவ்வாறு வெளிப்படுத்தித் தங்களின் சேவையைப் பொய்யாக்கக் கடிதமனுப்பிய பெரியார் தர்மகர்த்தாக்களில் ஒருவரா அல்லது வழிபடுவோரில் ஒருவரா என்பதையும் அவரது விலாசத்தையும் வெளிப்படுத்துவது நன்றென்பதையும் தங்களுக்கு பணிவுடன் அறியத்தருகிறேன். சுருட்டுத் தொழிலாளர்களின் பெருமுயற்சியும் பணஉதவியுமே இக்கோவில் பொதுக் கோவிலாக்கப்பட்டமைக்கு மூலகாரணம் என்பதையும் அத்தொண்டர்களாலேயே தற்பொழுதும் கோவிற்தொண்டுகள் நடைபெற்றுவருகின்றன என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

நாற்பது வருடங்களாக வழக்கு நடைபெற்று வந்த இக்கோவில் இனியாயினும் சமாதானமாக நடாத்தவிட மனமொருப்படும் தர்மகர்த்தாக்களைப் பிரிவினைக்குள்ளாக்க விரும்பும் அழுக்காறெனை ஒருவரால் இக்கைங்கரியம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். தற்பொழுது தர்மகர்த்தாக்களாலும் கோவிற் குருக்கள் மாரினாலும் யாதொரு பெரும் பிழைகளும் ஏற்படவில்லை. ஆயினும் கோவிற் தருமசாதனக் காணிகள் எல்லாம் முறையாக ஆட்சியும் வருமானங்களும் தர்மகர்த்தாசபைக்கு இன்னும் வந்து சேரவில்லையென்பதையும் துக்கத்துடன் அறியத்தருகிறேன்.

சி. இராசலிங்கம்
இளைப்பாறிய அதிபர்

# ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும் அப்பாலைக்கப்பால் இருப்பவர் கடவுள் சிவன்

நன்மை தீமை இரண்டும் அறியாதவாறு முற்றிலும் தம்மை இறைவனிடம் ஒப்புவித்த பெரியோர் உள்ளத்தில் உள்ளாக இருப்பவர் சிவன்.

எல்லையில்லா அருள் செறியும் பரிபூரண் நிறையும் கரைகாண முடியாத ஆநந்த மயமாகவும் இருப்பவர் கடவுள். இதனை மேற்கூறிய வாக்கை ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும் அப்பாலை பாடுவோம் என்ற மாணிக்கவாசகர் பின்னரும் அருட்செறிவு பூண்ட மகான்கள் எல்லாரும் இந்த பரமஆனந்தக் கடலுள் மூழ்கி தம்மை மறந்து இருந்தார்கள் ''கடலே அனைய ஆநந்தம் கண்டார் எல்லாம் சுவர்ந்துண்ண இடரே பெருக்கி ஏசற்றிங்கு இருப்பதழகோ உடையானே'' எனக் கூறுகின்றார்.

ஆம் வாழ்க்கை இடருடையது. பொல்லாத இடருடையது. இந்த வாழ்க்கையில் உண்மைத் தெளிவிலாத பகை வந்துவிட்டால் அதற்கு அப்பால் ஒன்றும் செய்ய முடியாது.

எல்லா விதமான கொடிய நோய்களைப் போன்றுதான் பகையும் அல்லலும் பெருகிக் கொள்வன, பகையைக் களைந்து விட்டால் பின்னர் வேறு தீங்குகள் தலைப்படாது. இதனைத்தான் யோகசுவாமிகளும் வெல்லும் பகை ஒழியச் சொல்லு சிவமே வேறு பொருள்இல்லை என்று சொல்லு சிவமே என்கின்றார். அல்லல் அற்று வாழவழி இதுவேயாகும். பகை இருவகையாகும். ஒன்று உட்பகை மற்றவை வெளிப்பகையாகும்.

வெளியிலே உபசாரமாக நண்பர் போல் நடித்தாலும் உள்ளாக நினைப்புகள் வேறாக இருக்கவும் கூடும். பகைக்கு மூலகாரணமாவது பொறாமையேயாகும். ஆதலினாலே தெளிந்தோர்கள் தம்மிடம் பொறாமை வராது பாதுகாத்துக் கொள்வர்.

இதைத்தான் மாணிக்கவாசகரும் அருமையாகக் கிடைத்த பிறவியை நினைவில் கொண்டு; இதைப் போல் இனி ஒரு பிறவி வராது. வராதிருந்தால் பேரானந்த வடிவான சிவனைப் பெறும் மார்க்கம் கிடையாது என்ற கவலை மிகுதி தென்பட அதனாலே உள்ளம் வருந்துவார் போன்று பெரியோர்கள் உண்மை உணர்ந்து உன் திருவடி சேர்ந்து இன்பமுற நான் மட்டும் இடரைப் பெருக்கி ஏதும் வகையறியாது இருத்தல் உனக்கு முறையாகுமோ எனக் கேட்கின்றார்.

உன் சித்தம் சிறிது இரங்கினால் எனக்கும் இடர் உண்டாகுமோ? கவலை வேண்டுமோ? பிணிதானும் வருமோ? இல்லையே என்க் கூறுகின்றார்.

ஆனதினாலே தவமே பெரிது உழன்று உண்மை அறியும் அவாவினால் பலர் எல்லாச் சுகங்களையும் ஒறுத்து நீக்கி சிவன் திருவடியே தஞ்சமாகி நிற்ப எம்பிரான் அவர்பால் இரங்கி அருள்புரிதலும் கடல்போலும் அந்த ஆநந்தத்தை கண்டு கொண்டு கவர்ந்து அள்ளி உண்டு செயலற்றிருந்தார் பெரியோர்கள். அவர் நிலை அவ்வாறாக நானும் அதற்கே ஆசைப்பட்டேன். எனக்கு உலக பந்த இடர்களில் சிக்குவதாமோ என வருந்துகின்றார்.

இதுவுமல்லாது அறவே நினது அன்பர்கள் முடிவுகாண்பரிய வழியில் உள்ளம் நெக்கு நெக்கு உருகவும் பெற்றுக்கொண்டார். ஆனால் நான் புறமே கிடந்து கீழ்ப்பட்ட நாயினேன் புலம்புகின்றேன். இறைவா நான் உன்னிடம் உண்மையான அன்பைப் பெறவே வேண்டும். பேராத ஒழியாத பிரிவில்லாத மறவாத நினையாத நிலையில் அருளாய நிலையில் அளவுபடுத்த முடியாது என்றும் மாயாத இன்பமாகடலே என்கின்றார்.

ஆனமையாலே தமிழ் மக்களே பகை என்பது மேலான உயர்ந்த நிலையைச் சென்று சேர்வதற்கு எவ்வளவு இடரை வருவித்தவாறு நிற்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இட்டான் அறிந்திலன் ஏற்ருள் கண்டிலள் தட்டான் அறிந்தும் ஒருவர்க்கும் சொல்லான்

திருமூலர் பெருமான் தனது திருமந்திரத்துள் சிலவற்றுள் அருமையான வாக்கியங்களை வைத்து பாடி உள்ளார்;

அவர் பாடிய மந்திரங்கள் யாவும் உலகிற்கு பெரும் பயனுகின்றது. அவர் மந்திரங்கள் சிவனை அடைவதற்கு உற்ற தந்திரங்காளாவன. மூவாயிரம் மந்திரங்கள் உண்டு இந்த மூவாயிரத்திலும் பலபல நல்ல கருத்துக்கள் உண்டு. அவற்றினில் ஒரு திருமந்திரத்தைக் கீழே காணுகின்றீர்கள்: அதனைச் செவ்வனே தெளிவோமேயானுல் அவற்றில் உலகில் உண்மையின் விளைவு எப்படி என்பது புலனுகும்;

அம்மந்திரம் இதுவாகும்.

இட்டான் அறிந்திலன் ஏற்றவள்
கண்டிலள்
தட்டான் அறிந்து ஒருவர்க்கும்
உரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும்
அங்குளன்
கெட்டேன் இம் மாயையின்
கீழ்மை இவ்வாறே:

இந்த திருமநதிரம் பரிபாஷையாக உரைத்தவாருகும். அதாவது தன் பிறவியின் வரலாற்றை உரைத்தவாருகும்: இந்தப் பாடலில் பெரிய உண்மை சொல்லப்படுகின்றது.

வாழ்வு என்பது ஒரு மயக்கம் தானே; மாயை என்றும் சொல்லப்பெறும்; மாயையில் சிக்கிவிட்டால் பின்னர் அதனின்றும் மேல் எழமுடியாது: அப்பாடா இந்த மாயை கெடுதியை வருவித்து கெடுதியில் போய் முடியும். ஆகவே தனது பிறவியின் மூலகாரணத்தை முதல் இரண்டு வரியிலும் சொல்லுகின்ருர்.

அதிலே முதலில் இட்டார் என்பது தனது தந்தையை; ஏற்ருர் என்பது தாயை; தட்டான் என்பது பிரமனைக் குறிக்கும். இதன்படி தனது பிறவியைக் குறித்தால் யாரோ இருவர் முதல் காலாக உள்ளார். அவர்கள் யாராக இருக்கலாம் என்ருல் தாயும் தந்தையும் படைக்கும் பிரமனுமாவர்;

இதனுலே இப்பாடற் கருத்தை இனி ஆராய்வோம். இட்டார் அறிந்திலர் என்றது தன்னை தோற்றுவித்தர்க்கு ஏதுவாக இருந்த தந்தை தன் மனதில் தோன்றிய காமஉணர்வினுல் ஏதோ செய்தார். செய்தார்க்கு இது எப்படியாகும் என்பது தெரியாது. ஏற்ருரும் கண்டிலர் என்றது உறவின் போது தந்தை கொடுக்க, கொடுத்ததை ஏற்றுக்கொண்ட தாய்க்கு இது இப்படி முடியும் என்பதை தாய் காணுள் அவளுக்கும் ஏற்ற அந்த நேரம் தொடக்கம் என்ன நடக்கும் என்பது தெரியாது: அதனுலே கண்டிலர் எனக் கூறினுர்.

அடுத்தது தனது பிறவி தோன்றும் காலத்தை பிரமன் (தட்டான்) உணர்ந்து தட்டான் தன் வேலையைக் கருவுள் நின்று தொடங்கினுன்;

இதைத்தான் தட்டான் அறிந்து தன் தொழிலை படைப்பைத் தொடங்கும்போது தாயிடமோ தந்தையிடமோ தான் இதைச் செய்கிறேன் என்று சொல்ல மாட்டான். ஆதலினுலே அவன் தனது வேலையைச் செய்து முடித்தான் இரகசியமாக என்றதால் தட்டான் அறிந்து ஒருவர்க்கும் உரைத்திலன் என்கிருர்.

அடுத்து இந்த என்னைப் படைக்கும்போது வேதம் சொன்ன சிவனும் அங்கிருந்தார் என்றும் அவர் அங்கு இருக்கின்ருர் என்றதை பட்டாங்கு சொன்ன பரமனும் அங்குளன் என்று கூறி முடிவில் இப்படியாக என்னைப் படைத்துவிட நான் கெட்டேன் மாயையில் இக்கி பெரும் அவதிப்படுகின்றேன் என்கின்ருர். இந்த திருமூலரின் மந்திரத்தை உற்றுச் சிந்தித்தால் மாயாபந்தபாச உலகில் மனிதன்படும் அவதி எவ்வளவு ஆகின்றது;

சிவன் கூட இருக்கிருர் அவர் முன்னிலையில் நான் பிரமனுல் படைக்கப்பட்டேன். இது என்னைத் தோற்றுவித்த தந்தை தாயர்க்குத் தெரியாது. ஆனுல் நான் மட்டும் மாயஉலகை நம்பி வகைமோசமாக கிடந்து உழல்கின்றேன் என்கின்ருர்.

# குலம் இரண்டே என்று வேதம் சொல்வதாக ஔவைப் பிராட்டி கூறுகிருள்

இவ்வுலகில் குலம் இரண்டுதான் என்று வேதம் சொன்னது. சாதி இரண்டே ஒழிய வேறு பலவகைச் சாதி இல்லை;

இந்த இருவகையான சாதிகள் யாவை என உணர்ந்தால் கொடுத்த மக்களும் கொடாத மக்களுமேயாகின்றனர் என்கிருர் ஔவைப் பிராட்டி:

இதனை அவர் தமது பாடல் ஒன்றில் இப்படிக் கூறுகின்ருர்.

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால் நீதிவழுவா நெறி முறையின் — மேதினியில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி;

இப்பாடலை நாம் ஆராயப்புகுந்தால் இவ்வுலகில் சாதி என்பது இரண்டுதான் என்பதும் அந்தச் சாதியின் நிலை எப்படி எனின் நீதிநெறி முறமை வாழ்ந்து பணம் பொருள் சேர்த்து பிறர்க்கும் கொடுத்து உதவினுேர் உயர்ந்த குலத்தவராவும் அப்படிப் பொருள் வைத்திருந்தும் பிறர்க்கு இல்லாதவர்க்கு உதவமாட்டாதார் இழிந்தகுலத்தவராகவும் கருதப்படுவர்.

இதை நான் சொல்லவில்லை வேதத்தில் உள்ளவாறேயாகும் என்கிருர் ஔவை.

இந்த வேதத்தை பட்டாங்கு என மொழிவார்கள். மேலே திருமூலர் பெருமானும் பட்டாங்கு என வேதத்தைக் குறிப்பிடுதல் காண்க;

இதனுலேதான் அந்தணர்க்குற்ற ஆறு தொழிலிலே ஈதல் ஒன்று விதித்திடப்பட்டது;

அறம் என்பது ஈதலேயாகும். இந்த ஈதலை எல்லாப் பெரியோரும் வலி உறுத்தி உள்ளனர்;

ஈதல் அறம் என்றும் தீவினை விட்டு ஈட்டல் பொருள் என்றும் பேசப்படல் காணலாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கிலும் முத்தி நிலையான இன்பத்திற்கு அறமே முதலாவதாகும். எனவே இட்டார் பெரியோர் என்றும் அதில் நீதி நெறி முறமை உணர்ந்து வாழ்ந்து கொடுத்தல் மேலான செயல் என்றும் கூறப்படுகின்றது.

யோகசுவாமிகளும் இதனையே நில்லாத செல்வத்தை நேராகப்பெற்ருல் இல்லாதவர்க்குக் கொடுத்து நல்லாய் சிவனைத் தொழுவார்க்கு என்றும் குறை உண்டோ எனக் கூறுகின்ருர்;

ஆனதினுலே நெறி முறமை தவறி பொய் பேசி கீழ்மைகள் செய்து மற்றையோரைக் கேவலமாக மதித்து வாழ்பவர் தனது செல்வத்தைப் பிறர்க்கு பகிர்ந்து கொடுத்திடவே மாட்டார். இது நேரடியாக காணப்படுவது ஒன்று.

ஆகையினுலே யாவராக இருந்தாலும் சிறுபான்மையினர் என்று இன்று கருதப்படவேண்டியவர் நீதியில்லா வாழ்க்கை உடையவரே!

அன்றுள்ள காலங்களில் மது உண்போர் மாமிசம் புசிப்போர் கொலைபுரிவோர் பொய் கூறுவார் இவர்களை நம் முன்னைப் பெரியோர் சிறுபான்மையராகவே கருதி அவர்களை சமூக நலன்கள் இல்லாதவர் எனக் கூறிநின்றனர் என நாம் எண்ணுவதற்கு இடமுண்டு.

# தமிழர் நலமுற வேண்டின் பொதுநல சேவை அறநிலையங்கள் நீதிநெறிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்

சந்திரதீபத்திற்கு பல அன்பர்களிடமிருந்து பல பொதுநல அறநிலையங்களின் நடத்தைகள் மோசமாக இருக்கின்றன என்ற செய்திகள் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அந்தச் செய்திகளை நாம் கேட்கும்போது அறநிலையங்களில் பல பொருள்களைச் சேகரித்து அதன் சுருமகர்த்தாக்கள் அப்பொருளை தமது சொந்த நலனிற்கே செலவிடுவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் சங்கீத வளர்ச்சிச் சபை பல ஆயிரம் ரூபா சேகரித்து சங்கீதப் பயிற்சிக்கு ஓர் மண்டபம் கட்ட வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டு இப்பொழுது அதன் தலைவரும் சிலருமாக அப்படியாகச் சேர்த்துக்கொண்ட பணத்தை தங்கள் சொந்த தொழில் ஒன்றில் ஈடுபடச் செய்திருக்கின்ருர்கள் என்பது தெளிவு படுத்தப்படுகின்றது;

இதை விடுத்து சைவம் பரிபாலிப்பது என்ற பேரில் இயங்கும் ஓர் சபை தாங்கள் ஒழுங்காக ஒரு பொதுக் கூட்டம் நடத்திடமுடியாத நிலையில் மகாநாடு நடத்தி சபைக்குரிய பொருளை விரயம் செய்கின்றனர். என்பது சுட்டிக் காண்பிக்கப் பட்டது.

இப்படியாக நல்ல அருட்செறிவு விளங்கி நல்லெண்ணங்களும் நல் உறவுகளும் அன்பு வழிகளும் பெருக்கப்படவேண்டிய அறநிலையங்கள் இப்படியான கீழ்மைச் செயல்களில் ஈடுபட்டால் இதன் பயன் பாவப்பெருக்கமாகி பல துன்பங்களையும் வருவித்து நாட்டில் பீதியும் பகையும் கொலை கொள்ளை முதலியன பெருகுதற்கு ஏதுவான வழிவகுக்கும என்பதை சைவ நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. இதை எல்லா அறநிலையங்களும் நினைவிற் கொண்டு வாழ்தல் நலம் என்பது நோக்கமாகும்!

# கடும்பகையும் கடும்பிரளிகளும் எம்பெருமான் இருப்பிடங்களில் ஆகாது என்பதால் கண்டனம் தெரிவித்தோம்

சந்திரதீபப் பத்திரிகையின் நோக்கம் எம்பெருமானுடைய இருப்பிடங்களில் கடும்பகையோ பிரளிகளோ இருத்தல் ஆகாது. அவை திருவருள் நெறிக்குப் பொருந்தாது என்பதால் கோயில் பேரில் தவறுகளைச் சுட்டிக் காண்பித்தோம்.

மாணிக்கவாசகர் கடவுளை அகப்படுத்தும் ஒரு மார்க்கம் பத்தி வழியே என்கின்ருர். இதனைப் பத்திவலையில் படுவோன் காண்க. சித்தமும் செல்லாச் சேட்சியன காண்க, ஒருவன் என்னும் ஒருவன் காண்க விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க என்கிருர். ஆனமையாலே பத்திக்கு பகையும் பிரளிகளும் புறமானவை; உள் அன்பினுல் எல்லோருடனும் பகைபாராட்டாது முகம் சுழியாது நற்கருமங்களை உணர்ந்து நடத்தல் நன்றேயாகும்.

ஆனதினுலே சிந்தைக்கு எட்டாதவனை நாம் சித்தம் ஒன்றி திருவருளே சேரும் நலமுடன் பூசித்து வழிபடுதல் நன்று என்பதால் சிலதகாத செயல்களைக் கோவில்களில் செய்யாதீர் என்ரேும். பகை வேண்டாம் என்ரேும்.

பகை என்பது சித்தத்தின் மலப்பற்ருகும். சித்தம் தூய்மையாக இருக்கும் எவரும் ஒருபோதும் பகை எவருடனும் பாராட்டார். தாம் கோயில் பொருட்களை தீண்டமாட்மாட்டார். இவைகளை எல்லாம் நம் மக்கள் உணரவேண்டும்.

கோயில்களில் நடப்பனபற்றிக் கண்டனம் தெரிவிப்ப நாம யார்? நாம் என் அறிந்து சொல்வோம்; எமக்கு என்ன அதிகாரம் ஒன்றுமே இல்லை.

ஆகையால் ஏதோ அருளின்வழி சந்திரதீபப் பத்திரிகையை சிவதொண்டாகவே செய்து வருகிறேன். யார் மீதும் நாம் குறைகாணவில்லை; தயவு செய்து இதை எல்லாவற்றையும் நன்கு உணர்ந்து கொண்டு நம்மை யாரும் தவருக எண்ணுதீர்;

## இப் பத்திரிகை பற்றிய தகவல்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் வசிக்கும் திரு: வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப தவநெறி வளாகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10-11-1981 ஆகும் தொடர்புகட்கு ஆசிரியர், சந்திரதீபம், கொக்குவில் என விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். வருட சந்தா ரூபா 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org